# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி.

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

## தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்

**DIRECTORATE OF DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

## இலக்கணம் - அணி இலக்கணம்


முனைவர் த.க. ஜாஸ்மின் சுதா

உதவிப் பேராசிரியர்

தமிழியல்துறை


2023 – 2024


மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி.

| Learning Objectives | |
|---|---|
| The Main Objectives of this Course are to : | |
| • யாப்பின் பண்புகள், செய்யுளில் அவற்றின் தேவை குறித்து அறிதல்<br>• யாப்பின் அடிப்படை உறுப்புகளான எழுத்து, அசை, தொடை, ஆகியவற்றையும் மாணவர்கள் அறிந்து கொள்ளுதல்<br>• அணியின் பண்புகள் செய்யுளில் அவற்றின் தேவை குறித்து அறிதல்<br>• தொல்காப்பிய உவமை பிற்காலத்தில் அணி இலக்கணமாக வளர்ச்சி பெற்ற நிலைகள் குறித்து அறிந்து கொள்ளுதல்<br>• பல்வகை அணிகளைக் காட்டுகளுடன் கற்றறிதல் | |

## நான்காம் பருவம்

## முதன்மைப் பாடம்

## இலக்கணம் - அணி இலக்கணம்

**அலகு-1**

பொருளணியியல்: செய்யுள் - செய்யுள் நெறி

**அலகு-2**

### பொருளணியியல்

**தன்மை அணி:**

வகைகள் - பொருள் தன்மை, குணத் தன்மை, சாதித் தன்மை, தொழில் தன்மை (4 மட்டும்)

**உவமையணி:**

வகைகள்: விரி உவமை, தொகை உவமை, இதரவிதர உவமை, சமுச்சய உவமை, உண்மை உவமை (5 மட்டும்)

**உருவக அணி:**

வகைகள் - தொகை உருவகம், விரி உருவகம், தொகைவிரி உருவகம், இயைபு உருவகம் (4 மட்டும்)

**தீவக அணி:**

வகைகள் - முதல் நிலை குணத்தீவகம், முதல் நிலை தொழில் தீவகம், முதல்நிலை சாதித் தீவகம், முதல் நிலைப் பொருள் தீவகம் (4 மட்டும்)

**பின்வருநிலை அணி:**

வகைகள் - சொற் பின்வருநிலை, பொருள் பின்வருநிலை, சொற்பொருள் பின்வருநிலை, உவமைப் பொருட் பின்வருநிலை (4 மட்டும்)

**அலகு -3**

**முன்னவிலக்கணி:**

வகைகள் - பொருள் விலக்கு, குண விலக்கு, காரண விலக்கு, காரிய விலக்கு (4 மட்டும்)

வேற்றுமைப் பொருள் வைப்பணி:

வகைகள் - முழுவதும் சேரல், ஒரு வழிச் சேரல், முரணித் தோன்றல், சிலேடையில் முடித்தல் (4 மட்டும்). வேற்றுமை அணி – விபாவனை அணி – ஒட்டணி – அதிசய அணி – தற்குறிப்பேற்றணி – ஏது அணி – நுட்ப அணி.

**அலகு -4**

இலேச அணி – புகழ்வது பொலப் பழித்தல், பழிப்பது போல புகழ்தல் (2மட்டும்).
நிரல்நிறை அணி – ஆர்வ மொழி அணி – சுவையணி – தன்மேம்பாட்டுரை அணி – பரியாய அணி – சமாயித அணி – உதாத்த அணி – அவஙதியணி, சிலேடையணி – செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை (2 மட்டும்).

**அலகு – 5**

விசேட அணி – ஒப்புமைக் கூட்ட அணி – விரோத அணி – மாறுபடு புகழ்நிலையணி – புகழாப்புகழ்ச்சி அணி – நிதர்சன அணி – புணர்நிலையணி – பரிவர்த்தனை அணி – வாழ்த்து அணி – சங்கீரணவணி – பாவிக அணி.

**பாடநூல்:**

சுப்பிரமணிய தேசிகர் உரையாசிரியர் தண்டியலங்காரம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**பார்வை நூல்:**

வ.த.இராமசுப்பிரமணியம் தண்டியலங்காரம்: முல்லை நிலையம், சென்னை.

# பொருளணியியல்

**1.செய்யுள் வகை:**

“செய்யுள் என்பவை தெரிவுற விரிப்பின்

முத்தகம் குளகம் தொகை தொடர் நிலையென

எத்திறத் தனவும் ஈரிரண்டாகும்”

**விளக்கம்:**

செய்யுள் என்பவை பற்றி விளக்கமாகச் சொல்வதனால், இவை 1. முத்தகம், 2. குளகம், 3. தொகை, 4. தொடர்நிலை என்னும் நான்கு வகையினுள் அடங்கும்.

## 1. முத்தகம்

**“அவற்றுள்**

**முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்”**

**விளக்கம்:**

சொல்லப் பெற்ற நான்கு வகைச் செய்யுள் வகைகளுள், முத்தகச் செய்யுள் என்பது தனியாக நின்று ஒரு பொருளை உணர்த்தி முடியும் தன்மை பெற்றதாகும்.

**(எ-கா)**

**“என்னேய் சிலமடவார் எய்தற்கு எளியவோ**

**பொன்னே அநபாயன் பொன்னெடுந்தோள்…….”**

**விளக்கம்:**

பொன்னைப் போன்றவளே! தனக்கே முன்னுரிமை உடையனவென்று கருதி வெற்றித் திருமகள் சேர்ந்திருக்கும் மூங்கில்கள் நெருங்கியிருக்கும் மலை போன்ற சில பெண்களுக்கும், தழுவுவதற்கு எளியவை யாகுமோ? ஆகாது காண்!

## 2. குளகம்

**“குளகம் பலபாட்டு ஒருவினை கொள்ளும்”**

**விளக்கம்:**

பல பாட்டுகள் ஒரு வினையைக் கொண்டு முடியுமாறு அமைந்து வருவது குளகம் ஆகும்.

**(எ-கா)**

**"முன்புலகம் ஏழிணையும் தாயதுவும், மூதுணர்வோர்**

**இன்புறக்கங் காந்தியை ஈன்றதுவும்......"**

**விளக்கம்:**

திருவரங்கம் பெருமாளின் திருப்பாதப் பெருமையைப் போற்றுவன இவை. வினை முடிவு வினையைக் கொண்டும் முடியும், பெயரைக் கொண்டும் முடியும். இங்கே "திருவரங்க மாவலவன் கால்" எனப் பெயரைக் கொண்டு முடிந்தமை காண்க.

**முத்தகம் - தனியே ஒரு கவியாய் முடிவது**

**யுக்குமம் - இருகவிகளோடு கூடியது**

**விசேடம் - மூன்று கவிகளோடு கூடியது**

**கலாபம் - நான்கு கவிகளோடு கூடியது**

**குளகம் - ஐந்து கவிகளோடு கூடியது.**

## 3. தொகை நிலை

**"தொகைநிலைச் செய்யுள் தோன்றக் கூறின்**

**ஒருவன் உரைத்தவும் பல்லோர் பகர்ந்ததவும்**

**பொருளிடம் காலம் தொழிலென நான்கினும்**

**பாட்டினும் அளவினும் கூட்டிய வாகும்"**

**விளக்கம்:**

தொகை நிலைச் செய்யுள் என்பதனை விளங்கச் சொல்லுமிடத்து, ஒருவனால் உரைக்கப்பட்டுப் பல பாட்டாய் வருவனவும், பலரால் உரைக்கப்பட்டுப் பலபாட்டாய் வருவனவும் பொருளால் தொகுத்தனவும், இடத்தால் தொகுத்தனவும், பாட்டால் தொகுத்தனவும், அளவால் தொகுத்தனவும் என வருவனவாகும்.

பொருள் பற்றி கூறுவன - **புறநானூறு, அகநானூறு**

இடம் பற்றி கூறுவன - **களவழி நாற்பது**

| | | |
|---|---|---|
| காலம் பற்றி கூறுவன | - | **கார் நாற்பது** |
| தொழில் பற்றி கூறுவன | - | **ஊஞ்சல்** |
| கவி பற்றி கூறுவன | - | **கலித்தொகை** |
| அளவு பற்றி கூறுவன | - | **பதிற்றுப்பத்து, குறந்தொகை** |
| ஒருவரால் பாடப்பட்டது | - | **திருக்குறள், கார்நாற்பது** |
| பலரால் பாடப்பட்டது | - | **அகநானூறு, பன்னிரு படலம்.** |

## 4. தொடர் நிலை

**“பொருளினும் சொல்லினும் இருவகை தொடர்நிலை”**

**விளக்கம்:**

தொடர்நிலைச் செய்யுள் என்பது பொருளினால் தொடர்தலும், சொல்லினால் தொடர்தலும் என இருவகைப்படும். தொடர்நிலை – தொடர்ந்து நிற்றல் உடையது. இது தொகை நிலைக்கு எதிரானது.

### 1. பொருட்டொடர் நிலை

**“பெருங் காப்பியமே காப்பியம் என்றாங்**

**கிரண்டாய் இயலும் பொருட்டொர் நிலையே –**

**விளக்கம்:**

பொருள் தொடர்நிலைச் செய்யுள் பெருங்காப்பியம் எனவும், காப்பியம் எனவும் இரண்டு வகையாகும்.

### அ. பெருங்காப்பியம்

**“அவற்றுள்**

**பெருங்காப் பியநிலை பேசுங் காலை**

**வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்று**

**ஏற்புடைத் தாகி முன்வர வியன்று**

**நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்**

**தன்னிக ரில்லாத் தலைவனை உடைத்தாய்**

**மலைகடல் நாடு வளநகர் பருவம்**

**இருசுடர்த் தோற்றமெண் றினையன புனைந்து**

**நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்**

**பூம்பொழில் நுகர்தல் புனல்வினை யாடல்**

**தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்**

**புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்**

**றின்னை புனைந்த நன்நடைத் தாகி**

**மந்திரதீ தூது செலவிகல் வென்றி**

**சந்தியிற் றொடாந்து சருக்க மிலம்பகம்.**

**பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி**

**நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக**

**கற்றோர் புனையும் பெற்றிய தென்ப"**

**விளக்கம்:**

பொருட்டொடர் நிலைச் செய்யுளில் பெருங்காப்பியத்தின் இலக்கணத்தைக் கூறுமிடத்து வாழ்த்துதல், கடவுளை வணங்குதல், உரைக்க வந்த பொருளை உணர்த்துதல் என்னும் மூன்றில் பொருத்தமுடைய ஒன்று முன்வர இயங்கி, அறம் முதலிய உறுதிப் பொருள்கள் நான்கினையும் பயக்கும் நடையுடைத்தாய், தன்னோடு ஒத்த நிலையும் மிக்க நிலையும் இல்லாதவனைத் தலைவனாகவுடைத்தாய், மலை வருணனை, திங்கள் தோற்றத்தின் வருணனை என்று இவைபோன்ற வருணனைகளை உடைத்தாய், நல்ல திருமண நிகழ்ச்சிகளை அமைத்தல், முடிசூட்டு விழாவினை அமைத்தல், அழகிய சோலைகளில் இன்பம் நுகரும் நிகழ்ச்சியை அமைத்தல், நீர் விளையாட்டுக்களை அமைத்தல், இனிய பிழிவாகிய கள்ளினையுண்டு களித்திருக்கும் பகுதிகளை அமைத்துக் காட்டல், மக்களைப் பெறுதல், புலவியால் வெறுத்தல், கலவியால் களித்தல் முதலிய கற்பனை மிக்க நல்ல நடையுடைத்தாய், சபை, தூதுவர், பகைவர் மேற்படையெடுத்தல், அவரோடு மாறுபடுதல், அம்மாறுபாட்டில் வெற்றி பெறுதல் முதலிய இடைவிடாது தொடர்ந்து சருக்கம், கலம்பகம், பரிச்சேதம் என்னும் பிரிவுகளுடன் விளங்கி, எட்டு வகைப்பட்ட சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்பும் இடைவிடாமல் கேட்போர் விரும்புமாறு கற்றோரால் ஆக்கப்படும் தன்மையை உடையதென்று சொல்லுவர் ஆசிரியர்.

### ஓர் புறனடை

**“கூறிய உறுப்பிற் சிலகுறைந் தியலினும்**

**வேறுபா டின்றென விளம்பினர் புலவர்”**

**விளக்கம்:**

பெருங்காப்பியத்தின் இலக்கணமாக மேற்கூறப்பட்ட உறுப்புகளிற் சில குறைந்து வருமாயினும் குற்றமெனத் தள்ளப்படாது, பெருங்காப்பியமென்றே கொள்ளப்படும் என்பார் புலவர்கள்.

குறைதல், உறுதிப்பொருள் நான்கனுள் ஒன்றும் குறையாது, வருணனைகளில் சில குறைதலாம். ஏனெனில் உறுதிப் பொருளில் குறைவது சிறு காப்பியமாகிவிடும்.

### ஆ. காப்பியம்

**“அறம் முதல் நான்கினும் குறைபா டுடையது**

**காப்பியம் என்று கருதப் படுமே”**

**விளக்கம்:**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கனுள் ஒன்றாயினும் பலவாயினும் குறைந்து வருவது காப்பியமாகும். சிறுகாப்பியம் என்றும் சொல்லப்படும்.

### காப்பிய நடை

**“அவைதாம் ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்**

**உரையும் பாடையும் விரவியும் வருமே”**

**விளக்கம்:**

மேற்கூறிய பெருங்காப்பியமும் காப்பியமும் தோன்றுங்கால் ஒரே வகைச் செய்யுளானும் பலவகைச் செய்யுளானும், இடையிடையே உரைப்பாட்டுக் கலந்தும், பிறமொழி விரவியும் வருதலையும் பெறும்.

### 2. சொற்றொடர் நிலை

**“செய்யுளந் தாதி சொற்றொடர் நிலையே”**

**விளக்கம்:**

ஒரு செய்யுளின் இறுதிச் சொல் அடுத்த செய்யுளின் தொடக்கச் சொல்லாக அமைந்து வருமாறு தொடுத்துச் செல்வன சொற்றொடர் நிலைச் செய்யுளாம்.

கலம்பகம், அந்தாதி, மும்மணிக்கோவை.

## 3. செய்யுள் நெறி

**"மெய்பெறு மரபின் விரித்த செய்யுட்கு**

**வைதருப் பம்மே கௌட மென்றாங்கு**

**எய்திய நெறிதாம் இருவகைப் படுமே"**

**விளக்கம்:**

பொருள் பெறும் இலக்கண வரம்பான் விரித்துக் கூறப்பட்ட செய்யுளனைத்திற்கும், வைதருப்ப நெறி, கௌட நெறி எனப் பொருந்திய நெறி இருவகைப்படும்.

### 1. வைதருப்ப நெறி

**"செறிவே தெறிவே சமநிலை இன்பம்**

**ஒழுகிசை உதாரம் உய்த்தலில் பொருண்மை**

**காந்தம் வலியே சமாதி என்றாங்**

**காய்ந்த வீரைங் குணனு முயிரா**

**வாய்ந்த வென்ப வைதருப் பம்மே"**

**விளக்கம்:**

செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில், பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக் குணமும் உயர்போல அமைந்து வருவது வைதருப்ப நெறியாகும்.

உறுப்புகள் யாவும் குறைவின்றி இருப்பினும் உயிரின்மையால் பதுமையை மனிதன் என்று கூறவியலாதவாறு போலச் செய்யுள் உறுப்புகள் யாவும் அமைந்து கிடப்பினும், உயிர் போன்ற இப்பத்துக் குணங்களும் இல்லாத செய்யுளைச் செய்யுளென்று கொள்ளப்படாது என்பது "தண்டியலங்கார சாரம்". இது விதர்ப்ப நாட்டுக் கவிஞரால் விரும்பிக் கைக் கொள்ளப்பட்ட நெறியாதலால் "வைதரும்ப நெறி" என்றனர். இனிய சொல்லும் பொருளும் தழுவிவரச் சொற்களை தொடுக்கும் போக்கு இது எனவும் கூறுவர்.

### 2. கௌட நெறி

**"கௌட மென்பது கருதிய பத்தொடும்**

**கூடா தியலுங் கொள்கைத் தென்ப''**

**விளக்கம்:**

கௌட நெறியாவது வைதருப்ப நெறிக்கு உரித்தாகக் கூறப்பட்ட பத்துக் குணவயங்காரங்களுடனும் கூடியியலாது விபரீதப்பட்டு நடக்கும் நெறியுடையது ஆகும்.

"பத்தொடும் கூடாது" என்னும் முற்றும்மையை எச்சவும்மை ஆக்கிச் சிலவற்றோடு சிறிதும், சிவற்றோடு பெரிதும் ஒன்று பட்டும் வருமெனக் கொள்க. கௌட நெறி கடினமான சொல்லும் கடினமான பொருளும் தழுவி வரும். இது கௌட தேசக் கவிஞரால் விரும்பிக் கொள்ளப்பட்ட நெறியாகும். இவை இரண்டும் எளிதாக அறியக் கூடிய வேறுபாடுகளையும் உடையன.

## 1. செறிவு

**''செறிவெனப் படுவது நெகிழிசை யின்மை''**

**விளக்கம்:**

செறிவென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, நெகிழ்ந்த ஓசையின்றி வரத் தொடுப்பது.

**(எ-கா)**

**''சிலைவிலங்கு நீள் புருவம் சென்றொசிய நோக்கி**

**முலைவிலங்கிற் றென்று முனிவாள்……''**

**விளக்கம்:**

மாறுபட்டு "விளங்கிய தாரினையும் மாலையினை உடைய மார்பினையுடையாய்! புணர்ச்சிக் கண் மார்பம் சிறிது விலகா நிற்ப. அது கண்டு பொறுக்கும் ஆற்றலின்றி பிற்போல் வளைந்து நீண்ட புருவமானது நெற்றி மீது ஏறி வளைய, ஊடுந் தன்மையாள் நின் காதலி, அவள், இருளோடு மாலை வந்து கூடும் அந்திப் போதில், நின்பிரிவால் தனிமையுறும் காலத்து வரும் துயரத்தையும், பொறுக்கும் தன்மையினளாவாளோ?

## 2. தெளிவு

**''தெளிவெனப் படுவது பொருள்புலப் பாடே''**

**விளக்கம்:**

தெளிவென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது புலவன் தான் கருதிய பொருள் கேட்போர்க்கு உளங்கொள்ளுமாறு விளங்கத் தோன்றுவமாறு கூறுவது.

குறிப்பு மொழியின்றி வெளிப்படையாய் விரைவில் பொருள் புலப்படுமாறு சொல்வது தெளிவு திரி சொற்களும் குறிப்பும் வாராமையே தெளிவுக்குக் காரணம் ஆகும்.

**(எ-கா)**

**“பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**

**பிற்பகல் தாமே வரும்”**

**விளக்கம்:**

கௌடர், இவ்வாறு அமைதல் கவியினுடைய அருமையும் நோக்குடைய பொருட்கொள்கையும் இல்லாது தோன்றுமெனக் கருதி வேண்டுவர்.

### 3. சமநிலை

சமநிலை – வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்றும் சம அளவாக அமையப் பாடுவது.

வல்லினத் தொடை, மெல்லினத் தொடை, இடையினத் தொடை ஆகிய மூவினத் தொடையும் அமையவருவது எனினுமாம்.

**“விரவத் தொடுப்பது சமநிலை யாகும்”**

**விளக்கம்:**

வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவினமும் தம்முள் கலந்துவரத் தொடுப்பது சமநிலையாகும்.

**(எ-கா)**

**“சோகம் எவன்கொல் இதழிபொன் தூக்கின சோர்குழலாய்**

**மேக முழங்க விரைசூழ் தளவங் கொடியெடுப்ப…..**

**விளக்கம்:**

தொங்குகின்ற கூந்தலையுடையாய்! கொன்றை மரங்கள் பொன்னிற மாலைகளைத் தொங்கவிட, விண்ணகம் நெருங்க, மேகக் கூட்டகங்கள் முழங்கா நிற்ப, நறுமணமுடைய மலர்களோடு கூடிய முல்லைகள் பலவும் கொடியெடா நிற்ப. அழகிய இசை ஒலியோடு, வண்டுகள் களித்துப்பாட, எவ்விடத்தும் மயிற் கூட்டங்கள் ஆடா நின்றன. அதனால் நம்முடைய தலைவருடைய திண்ணிய தேரானது இப்பொழுதே வந்து தோன்றுவதாயிருந்தது. நின்னுடைய இவ்வருத்தம் இனி என்னாவது? அதைச் சொல்வாயாக.

### 4. இன்பம்

இன்பம் - இனிமையுடையது. வடநூலார் “மாதுரியம்” என்பர். மாதுரியம் - மதுரத் தன்மையுடையது.

**“சொல்லினும் பொருளினும் சுவைபடல் இன்பம்”**

**விளக்கம்:**

சொல்லினால் சுவை பயக்குமாறு அமைத்தலும், பொருளினால் சுவை பயக்குமாறு அமைத்தலும் இன்பமாம்.

சொற்காரணமாகிய இன்பம் என்பது வழிமோனை முதலாக வருமாறு அமைப்பது. வழிமோனை என்பது ஒவ்வோர் அடியிலும் சீர்கள் இடை நிற்ப, மோனைத் தொடை கொண்டு வருவது, மோனைத் தொடையாவது முதலெழுத்தெல்லாம் ஒன்றுபட்டு வருதல்.

**(எ-கா)**

**“முன்னைத்தம் சிறீறில் முழங்கு**

**கடலோதம் மூழிகிப் போக**

**அன்னைக்கு ரைப்பன் அறிவாய்**

**கடலேயென் றலறிப் பேருந்……”**

**விளக்கம்:**

முன்பு தம்முடைய சிறிய வீடாகிய மணல் வீடு ஒலிக்கின்ற கடல் வெள்ளத்தில் மூழ்கி அழிந்தொழிய, அது கண்டு ஆற்றாராய், “எம்முடைய அன்னைக்குச் சொல்வோம், கடலே! அறிவாயாக” என்று அலறிக் கொண்டு ஓடுகின்ற தன்மையராய பெண்கள், கடற்கரைச் சோலையிடத்துத் துன்புற்று அறுத்துச் சிந்திய வெண்ணிற முத்துக்கள், ஒளிவிடுகின்ற புன்னை அரும்பையொத்து, ஆண்டு வருகின்றவரை மயங்குமாறு செய்கின்ற காவிரிப் பூம்பட்டினமே எம்முடைய ஊர் ஆகும்.

## 5. ஓழுகிசை

ஒழுகிசை- செவிக்கண் இனிமையாய்ச் செல்லும் மெல்லிய இசை முதல் நூலார் “சுகுமாரதை” என்பர்.

மெல்லிய தன்மை என்பது அதன் பொருள்.

**“ஒழுகிசை யென்பது வெறுத்திசை யின்மை”**

**விளக்கம்:**

ஒழுகிசையாவது வெறுக்கும்படியான இன்னா இசையின்றி வரத் தொடுப்பது.

**(எ-கா)**

**“இமையவர்கண் மௌலி யினைமலத்தாள் சூடச்**

**சுமயற் தொறுநின்ற தையல் - சிமைய**

**மலைமடந்தை வாச மலர்மடந்தை யென்ணென்**

**கலைமடந்தை நாவலோர் கண்''**

**விளக்கம்:**

இரண்டாகிய மலரனைய சிறப்புப் பொருந்திய திருவடிகளைத் தேவர்களெல்லாரும் தங்கள் முடி மீது அணியும் வண்ணம் பல்வகைப்பட்ட சமயங்கள் தோறும் சென்று நின்றமாது சிகரங்களையுடைய மலையரசன் மகளுமாய் நறுநாற்றமுடைய தாமரை மலர் மீதிருந்த பொருட் செவியுமாய்ப், பல்வகைப்பட்ட கலைகளுக்கும் தலைவியுமாய் நின்ற கலைமகள். அவள், நாவினால் வன்மையுடையோருக்குக் கண்ணாயிருப்பவாள் ஆவாள்.

## 6. உதாரம்

உதாரம் - பெரியது, மேம்பாடுடையது அ.ஃ.தாவது குறிப்பினால் ஒரு சிறப்பினை விளைக்கும் பொருள்

படுவது. குறிப்பு – புத்தியினால் அறியப்படுவது.

**''உதார மென்ப தோதிய செய்யுளிற்**

**குறிப்பின் ஒருபொருள் நெறிப்படத் தோன்றல்''**

**விளக்கம்:**

உதாரமாவது, சொல்லப்பட்ட செய்யுளின் சொற்பாடு பொருளின்றி அதன் குறிப்பினால் ஒரு பொருள் முறையாகத் தோன்றுவது.

(எ-கா)

**''செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்**

**பெருமான் முகம்பார்த்த பின்னர் - ஒருநாளும்.....''**

**விளக்கம்:**

பொருளின்மேல் வைத்த அவாவினாலே, தாழ்வுடன் இரப்போருடைய கண்களானவை, போரிடத்து வன்மைமிக்க வேலையும் சென்னியென்னும் பெயரயுமுடைய, தென்திசைக்கண் உறந்தைப் பதிவாழ் மக்களுக்குத் தலைவனாகிய சோழனுடைய திருமுகத்தைப் பார்த்த பிறகு, பூவுலகிலுள்ள ஏனையோருடைய முகங்களைப் பொருள் விரும்பினால் பாராவாம். எனவே உறந்தைக் கோமான் சென்னியினுடைய முகத்தினைப் பார்த்த இரவலர் கண்கள் பிறர் முகம் காணாது என்பதனால், அவர்தம் வாழ்வு முடிவு போகுமளவிற்கு மிகுபொருள் கொடுத்தான் என்னும் பிறிது பொருள் குறிப்பினால் தோன்றியவாறு காண்க. இரப்பவர் வறுமைதீர கொடுப்பவன் சோழன் என்பது குறிப்பினால் தோன்றியது.

## 7. உய்த்தலில் பொருண்மை

உய்த்தலில் பொருண்மை என்பது, பிறிது சொற்களை வருவித்துச் சேர்த்து விளக்க வேண்டிய நிலைமையில்லாத பொருளுடைமை.

**"கருதிய பொருளைத் தெரிவுற விரித்தற்**

**குரியசொல் லுடைய துய்த்தலில் பொருண்மை"**

**விளக்கம்:**

உய்த்தலில் பொருண்மையாவது, புலவன் தான் கருதிய பொருளை விளங்குமாறு எடுத்துரைப்பதற்கு உரிய சொற்களை அச்செய்யுள் உடையதாயிருத்தல். உய்த்தல் - சொற்கள் வருவித்துச் சேர்த்தல்.

**(எ-கா)**

**"இன்றுமையாண் மாசிலா வாண் முகங்கண் டேக்கற்றோ**

**ஆன்றி விடவரவை யஞ்சியோ – கொன்றை….."**

**விளக்கம்:**

உமையம்மையினுடைய குற்றமில்லாத ஒளியுடைத்தாகிய முகவட்டத்தைக் கண்டு, அதனுடைய எழில் நலத்திற்கு ஆசைப்படுதலானோ? அன்றி அணியாகப் பூண்டுள்ள நஞ்சினையுடைய பாம்பினைக் கண்டு அஞ்சுதலினாலோ? கொன்றையின் மலர்களை வாரிக் கொண்டு கங்கையாறு விரைந்து வரும் ஒறியோடு கூடிய சடையினை உடையீர்! இன்று, திருமுடிமேல் உளதாகிய பிறை வளராதிருந்த காரணம் யாது?

## 8. காந்தம்

காந்தம் என்பது உரக இயற்கைக்கு உடன்பட்டுக் கூறுவது மனத்தை மகிழ்விப்பது எனினுமாம்.

**"உலகொழுக் கிறவா துயர்புகழ் காந்தம்"**

**விளக்கம்:**

காந்தமாவது ஒன்றனை உயர்த்திப் புகழுமிடத்து, உலக வழக்காற்றுக்கு மாறுபடாது உயர்த்துக் கூறுவது.

**(எ-கா)**

**"ஒருபே ருணர்வுடனே யொண்ணிறையுந் தேயவருமே**

**துறவென்பால் வைத்த – ஒரு பேதை….."**

**விளக்கம்:**

யான் வருத்தமுறுமாறு பேதைமையுடையாள் ஒருத்தி என் உள்ளத்திடத்து வைத்த மலரொடு கலந்த நறுநாற்றத்தையுடைய சுருண்ட கூந்தலினையுடைந்தாய், ஒளி பொருந்திய முகத்திடத்து உண்டாகிய காதின் எல்லைவரை சென்று மீண்டு திரியும் கண்களானவை. இக்காலத்து எனது கலங்காத அறிவுடனே சிறந்ததாகிய ஒழுக்கமும் கெட, வந்து தோன்றினவே!

“ஏதம்” என்பது எது என நின்று “வருத்தம்” எனும் பொருள் பயந்தது.

உலக இயலபிற்கு மாறுபட்டு வருவதேனும் கற்பனையால் ஒன்றை உயர்த்திப் புகழ்தலே அழகுடையதாகும் எனக் கௌடர் வேண்டுவர்.

## 9. வலி

வலி – வன்மையுடையது. முதல் நூலார் ஓசம். ஓசம்- சாமர்த்தியம் எனப் பொருள்படும்.

**“வலியெனப் படுவது தொகைமிக வருதல்”**

**விளக்கம்:**

வலியென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது தொகைச் சொற்றொடர்பு உண்டாகத் தொடுப்பது.

**(எ-கா)**

**“கானிமித்தாற் கண்பரிவு வல்லியோ புல்லாதார்**

**மானனையார் மங்கலநா ணல்லவோ – தான மழைத்…..”**

**விளக்கம்:**

காலம் வரையாது நலம் செய்கின்ற முகில் போன்ற பெரிய கையினையும், நீண்ட வீரக் கழலணிந்த காலினையும், வலிதாகிய வேலினையும் உடையவனாகிய சோழனுடைய, கிளையுடைய பெரிய கையினையும், தொங்குகின்ற வாயினையுமுடைய மலையாகிய யானை தன்னுடைய காலை நிமிர்த்தினால் அறுபடும் தன்மையையுடையன. விலங்கு மட்டுமோ? புகையரசர்களுடைய உரிமைச் சுற்றமாகிய மான் போன்ற விழியினையுடையார் கழுத்தில் நன்னாளிற் பூட்டிய வன்மை மிக்க மங்கலக் கயிறு மல்லவோ?

## 10. சமாதி

சமாதி – ஒரு பொருளோடு பிறதொரு பொருளை ஐக்கியப்படுத்திக் காட்டல் என்பர். அதுபோல் இங்கு உரிய பொருளின் வினையை ஒப்புடைப்பொருட்டு உரியதாகத் தந்து காட்டலின் அப்பெயராயிற்று.

**“உரியபொரு ளின்றி யொப்புடைய பொருண்மேல்**

**தரும்வினை புணர்ப்பது சமாதியாகும்''**

**விளக்கம்:**

உரிய பொருளின் வினையை அதையொத்த பொருளின்மேல் தந்து சேர்த்துக் கூறுவது சமாதி அணியாம்.

**(எ-கா)**

**''அகலரு விசும்பிற் பாயிருள் பருகிப்**

**பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி''**

**விளக்கம்:**

அகன்ற பெரிய வாணிடத்துப் பரவியிருந்த இருளை விழுங்கி ஒளியினைக் கக்கி எழுகின்ற பல ஒளிக்கற்றைகளையுடைய ஆதித்தன்.

**''கன்னி யெயில்''**

**மறுவற்ற மதிற்சுவர்**

**''குமரி ஞாழல்''**

**அழியாத இளமை பொருந்திய ஞாழல் மரம்.**

**புறனடை**

**''ஏற்ற செய்யுட் கியன்ற வணியெலாம்**

**முற்ற வுணர்த்தும் பெற்றிய தருமையிற்**

**காட்டிய நடைநெறி கடைப்பிடித் திவற்றொடு**

**கூட்டி யுணர்த லான்றோர் கடனே''**

**விளக்கம்:**

உலகத்து நிலைபெற்ற செய்யுளனைத்திற்கும் பொருந்திய அணிவகையெல்லாம், குறைபாடின்றி உணர்த்தும் தன்மை அரிதாகலான், காட்டப்பட்ட இருவகையான நெறியினைப் பற்றுக்கோடாக, இவற்றோடு மற்றைய நெறிகளையும் கூட்டிக் கொண்டுணர்தல் நிறைவுடைய அறிஞர்களது கடமையாகும்

.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | உவமைஎன்றால் என்ன? விளக்குக. | K2 | CO2 | PO4 |
| 2 | செய்யுள் உறுப்புகள் சிலவற்றை கூறுக. | K3 | CO3 | PO5 |
| 3 | யாப்புபொருள் விளக்கம் தருக. | K4 | CO4 | PO1 |
| 4 | குற்றியலுகரம்,குற்றியலிகரம் குறிப்புவரைக. | K5 | CO5 | PO2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | அசையின் இலக்கணம் அதன் முக்கியத்துவம் குறித்துஎழுதுக. | K1 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் இலக்கணம் எத்தனைவகைப்படும்? | K2 | CO1 | PO4 |
| 2 | செய்யுளுக்குமேலும் இனிமைசேர்ப்பதுஎது? | K1 | CO2 | PO6 |
| 3 | தமிழ் எழுத்துகளின் வகைப்பாட்டைவிரிவாகவிளக்குக. | K4 | CO2 | PO5 |
| 4 | நேரசை,நிரையசைஉருவாகும் விதத்தைசான்றுடன் கூறு | K3 | CO4 | PO6 |
| 5 | உயிர்மெய் எழுத்துகள் உருவாகும் முறையைவிவரி. | K5 | CO1 | PO3 |

## அலகு – 2

## பொருளணியியல்

### பொருளணிகளின் வகை

**“தன்மை யுவமை யுருவகந் தீவகம்**

**பின்வரு நிலையே முன்ன விலக்கே**

**வேற்றுப் பொருள்வைப்பே வேற்றுமை விபாவனை**

**ஓட்டே யதிசயந் தற்குறிப் பேற்றம்**

**ஏது நுட்பம் இலேசம் நிரனிறை**

**ஆர்வ மொழிசுவை தன்மேம் பாட்டுரை**

**பரியா யம்மே சமாயித முதாத்தம்**

**அரிதுண ரவநுதி சிலேடை விசேடம்**

**ஒப்புமைக் கூட்ட மெய்ப்படு விரோதம்**

**மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி**

**நிதரிதனம் புணர்நிலை பரிவருத் தனையே**

**வாழ்த்தொடு சங்க ரணம்பா விகமிவை**

**ஏற்ற செய்யுட் கணியே ழைந்தே"**

**விளக்கம்:**

இந்நூற்பா, அணிகளின் பெயரும், முறையும், தொகையும் கூறுகின்றது.

1. தன்மையணி, 2. ஊவமையணி, 3. உருவகவணி, 4. தீவக அணி, 5. பின்வருநிலையணி, 6.

முன்னவிலக்கணி, 7. வேற்றுப் பொருள் வைப்பணி, 8. வேற்றுமையணி, 9. விபாவனையணி, 10. ஓட்டணி, 11. ஆதிசயவணி, 12. தற்குறிப்பேற்ற அணி, 13. ஏது அணி, 14. நுட்பவணி, 15. இலேசவணி, 16. நிரனிறையணி, 17. ஆர்வ மொழியணி, 18. சுவையணி, 19. தன் மேம்பாட்டுரையணி, 20. புரியாயவணி, 21. சுமாயித வணி, 22. உதாத்த வணி, 23. அவநுதி யணி, 24. சிலேடையணி, 25. விசேட வணி, 26. ஓப்புமைக் கூட்டவணி, 27. விரோதவணி, 28. மாறுபடு புகழ் நிலையணி, 29. புகழாப்புகழ்ச்சியணி, 30. நிதரிசன வணி, 31. புணர் நிலையணி, 32. பரிவருத்தனையணி, 33. வாழ்த்தணி, 34. சுங்கீரணவணி, 35. பாவிகவணி ஆகிய முப்பத்து ஐந்து அணிகளும் பொருத்தமுடைய செய்யுட்கு உரியனவென்று சொல்லப்படும்.

## 1. தன்மையணி

தன்மை - இயல்பு. தன்மையெனினும் தன்மை நவிற்சி எனினும் ஒன்றே.

**"எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்கும்**

**சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்"**

**விளக்கம்:**

எத்தன்மையான பொருள்களையும் இயற்கையிலுள்ள உண்மையான பல வகையும் தோன்ற விளக்கும் சொற்களாலே முறையே தொடுக்கப்படுவது தன்மையணியாம்.

**"அதுவே**

**பொருள்குணம் சாதி தொழிலொடு புலனாம்''**

**விளக்கம்:**

தன்மையணி பொருள், குணம், சாதி, தொழில் ஆகிய இந்நான்கு பொருள் பற்றித் தோன்றும்.

எனவே, தன்மையணி, பொருட்டன்மையணி, குணத் தன்மையணி, சாதித்தன்மையணி, தொழிற்தன்மையணி என நான்கு வகைப்படும் என்பதாம்.

## வகைகள்

## 1. பொருள் தன்மையணி

பொருள்டத்துள்ள பல்வேறு வகை இயல்புகளையும் உள்ளபடியே அழகுபடுத்திக் கூறுவது இது.

**(எ-கா)**

**''நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்**

**நூலணிந்த மார்ப னுதல்விழியன் - தோலுடையன்**

**கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை**

**எம்மா னிமையோர்க் கிறை''**

**விளக்கம்:**

கருங்குவளைமலர் போன்ற அழகிய கழுத்தினையும் முடிமீது நீண்டிருக்கும் சடையினையும் மார்பகத்து அணியப்பட்ட முப்புரி நூலினையும், நெற்றியினிடத்துப் பொருந்திய விழியினையும், ஆடையாகக் கட்டிய தோலினையும், ஆடையாகக் கட்டிய தோலினையும், கையகத்து ஏந்திய மானினையும், தீப் போன்ற முழுவினையும், திருக்கச்சாலை என்னும் திருப்பதியினையும் உடையவன், எம்மை அடிமையாக் கொண்ட பெரியோன் இமையவர்களுக்குத் தலைவன்.

கச்சாலை எனும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள இறைவனே இங்குக் கூறவந்த பொருள் ஆயினும் நீலமணி மிடநுடைமை முதலிய பொருளின் தன்மைகளும் உணர்த்தினமையால் இது பொருள்தன்மை அணி ஆயிற்று.

## 2. குணத்தன்மையணி

குணத்திலுள்ள பல்வேறுபட்ட தன்மைகளை உள்ளபடியே அழகுபடுத்திக் கூறுவது குணத்தன்மை அணியாகும்.

**(எ-கா)**

**“உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையும்**

**தள்ளவிழி நீரரும்பத் தன்மறந்தான் - புள்ளலைக்கும்**

**தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்**

**பூந்தா மரைதொழுத பொன்”**

**விளக்கம்:**

உள்ளமானது குளிர்ச்சியடைய, மெய் மயிர் சிலிர்த்து உரையும் தடுமாறக் கண்ணிலே நீர் பெருகத் தன் உருவத்தையும் மறந்தாள். பறவைக் கூட்டம் அலைகின்ற தேன் நிறைந்த தாமரையையுடைய வயல்சூழ்ந்ததில்லைப் பொது சபையில் கண்ணே அழகுடன் கூத்தையாடுகின்ற கடவுளின் பொலிவுடைய திருவடித் தாமரையைத் தொழுத பொன்னையொப்பான்.

இங்கி “தன்னை மறந்தாள்” என்பது குணம் கூறியது. உள்ளம் குளிர்தல் முதலாயின குணத்துடன் நிகழும் அதன் தன்மைகள். இது தில்லைக் கூத்தனைத் தொழுதலாலாகும் பெருமகிழ்ச்சியின் தன்மையைக் கூறுதலான் குணத்தன்மையாம்.

## 3. சாதித்தன்மையணி

சாதியிலுள்ள பல்வேறுபட்ட தன்மைகளை உள்ளபடியே அழகுபடுத்திக் கூறுவது சாதித்தன்மை அணியாகும்.

சாதி என்பது ஒரு தன்மையவாய பல பொருளுக்குப் பொதுவாக நிற்பதோர் தன்மை என்பர்.

**(எ-கா)**

**“பத்தித் தகட்ட சூறைமிடற்ற பைவிரியும்**

**துத்திக் கனவநாத் துறையெயிற்ற – மெயித்தவத்தோர்**

**ஆகத்தா னம்பலத்தா னாரா வமுதணங்கின்**

**பாகத்தான் சூடும் பணி”**

**விளக்கம்:**

பத்தியாகிய கோடுகள் பொருந்திய வயிற்றை உடையனவாய்க் சரிய கழுத்தையுடையனவாய்ப் படத்தின்கண் பொறி போன்ற நிறத்தையும், இரண்டு பிளவான நாக்கினையும், துளையுடைய பல்லினையும் உடையனவாயிருப்பன. உண்மைத் தவத்தினையுடையார் நெஞ்சகத்துள்ளான், பொதுச் சபையில் நிற்பான், அருந்தா அமுதமனைய உமையம்மையை ஒரு பாகத்து உடையான் அணிந்து கொள்ளும் பாம்புகள்.

'பணி' எனுஞ்சொல் பொன் முதலிய உலோகத்தாலாகும் அணியையும், பாம்பினையும் குறிக்குமாயினும், ஈண்டும் பாம்பையே குறித்து நின்றது. அகடுடைமை, கறைமிடறுடைமை முதலியன பாம்புச் சாதியின் தன்மையைக் குறித்ததால் சாதித்தான்மையாயிற்று..

## 4. தொழிற்தன்மையணி

தொழிலுள்ள பல்வேறுபட்ட தன்மைகளை உள்ளபடி அழகுபடுத்திக் கூறுவது தொழில் தன்மை அணி

ஆகும்.

**(எ-கா)**

**"சூழ்ந்து முரன்றனவா வாசந் துதைந்தாடித்**

**தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும் - வீழ்ந்தபெரும்**

**பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை**

**வாசத்தார் நீங்காத வண்டு"**

**விளக்கம்:**

ஆசையை அறுத்து மலம் நீங்கினவர்களை விட்டு விலகாத பரஞ்சோதியினுடைய நறு நாற்றத்தையுடைய பசுமையாகிய கொன்றைப் பூமாலையைப் பிரியாத வண்டுகள், குழுமி இசையை எழுப்பிப் பொருந்தச் சென்று மணத்தை அறைந்து மேலே பறந்து, மீண்டும் விருப்புடன் தேனையுண்டு மகரந்தப் பொடியைக் கோதா் நிற்கும்.

வண்டின் தொழிலையெல்லாம் தொகுத்துக் கூறினமையால் தொழில்தன்மையணி ஆயிற்றி.

## 2. உவமையணி

**"பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்**

**ஓன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்த்**

**தொப்புமை தோன்றச் செப்புவ துவமை.**

**விளக்கம்:**

பண்பு, தொழில், பயன் என்பன காரணமாக ஒன்றாகியும் பலவுமாகியும் வரும் பொருளோடு பொருள் பொருந்துமாறு வைத்து, ஒப்புமை தோன்றப் பாடுவது உவமையென்னும் அணியாம்.

ஓன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்த்தல் என்பது – ஒரு பொருளோடு ஒரு பொருளும், ஒரு பொருளோடு பல பொருளும், பல பொருளோடு பல பொருளும், பல போருளோடு ஒரு பொருளும் பொருந்துமாறு சேர்த்தல்.

### 1. பண்புவமை

பண்பாவது பொருட்குணமாய்த் தனக்கு வேறொரு குணமில்லதாய் நிற்பது அது வண்ணம் வடிவு

முதலியன.

**(எ-கா)**

**“பவளத் தன்ன மேனி”**

பவளத்தைப் போன்ற நிறத்தினையுடைய வடிவம்.

**(எ-கா)**

**“வேய்புரை பணைத்தோள்”**

**விளக்கம்:**

மூங்கில் போன்ற திரட்சியான பருத்த தோள்.

### 2. தொழிலுவமை

தொழிலாவது பொருளின் புடை பெயர்ச்சியாயிக் காலத்தோடு புலப்படுவது.

**(எ-கா)**

**“அரிமா வன்ன அணங்குடைத் துப்பிற்**

**றிருமால் வளவன்”**

**விளக்கம்:**

பகைவர்க்குத் துன்பம் தரும் ஆண் சிங்கத்தைப் போன்ற வலிமையையும், செல்வப் பெருமையையும் உடைய கரிகாற்சோழன்.

### 3. பயனுவமை

பயனாவது செயல் காரணமாகத் தோன்றும் காரியம்.

**(எ-கா)**

**“மாரியன்ன வண்கைத்**

**தேர்வே ளாயைக் காணிய சென்மே”**

**விளக்கம்:**

கைம்மாறு கருதாது உலகிற்கு மழையைப் பொழிகின்ற மேகத்தைப் போலப் பயன் கருதாது பலர்க்கும் கொடுக்கும் வள்ளன்மை பொருந்திய கையையும், தேரினையுமுடைய வள்ளலாகிய ஆய் என்பானைக் காணச் செல்வாயாக!

ஒரு பொருளோடு ஒரு பொருள்

**(எ-கா)**

**“செல்வா னன்ன மேனி”**

அந்தி வானம் போன்ற சிவந்த வடிவம்

ஒரு பொருளோடு பலபொருள்

**(எ-கா)**

**“அவ்வான், இலங்குபிறை யன்ன விளங்குவால் வையெயிறு”**

**விளக்கம்:**

அந்த வானத்தில் விளங்கும் பிறைமதி போன்ற வெள்ளிய ஒளிவிடும் கூறிய பற்கள்.

பலபொருளோடு பல பொருள்

**(எ-கா)**

**“களிறெறி**

**குறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப**

**மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே”**

**விளக்கம்:**

யானையானது, பகைவரை மோதுகின்ற சுறாமீன் கூட்டத்தை ஒத்த வாள்வீரர் தன்னைச் சூழத் தன் மீதேறிய பாகரையும் அறியாது மதம் மிகுதிப்பட்டது.

பலபொருளோடு ஒரு பொருள்

**(எ-கா)**

**“பெரும்பெயர்க் கரிகாலன் முன்னிலைச் செல்லாப்**

**பீடின் மன்னர் போல**

**வோடுவை மன்னால் வாடைநீ யெமக்கே”**

**விளக்கம்:**

பெரிய புகழினையுடைய கரிகாற் சோழனுக்கு முன்னே செல்லாத வீரமற்ற அரசர் போல வாடைக் காற்றே! நீ எமக்கு முன் நில்லாது ஓடுவாய்.

### 1. விரியுவமை

பண்பு, தொழில், பயன் முதலியன விரிந்து நிற்க உவமிக்கப்படுவது விரியுவமை ஆகும். அ∴தாவது,

பொதுத்தன்மை வெளிப்படையாய் விரிந்து நிற்றலுடையது இது.

**“பால்போலு மின்பொற் பவளம்போற் செந்துவர்வாய்**

**சேல் போற் பிறமுந் திருநெடுங்கண் - மேலாம்**

**புயல் போற் கொடைக்கைப் புனனாமன் கொல்லி**

**ஆயல் போலும் வாழ்வ தவர்”**

**விளக்கம்:**

பால் பொன்ற இனிய சொல்லினையும், பவளம் போல் சிவந்து விளங்கும் வாயினையும், சேல் என்னும் மீன் போல் பிறமுகின்ற அழகிய நெடிய கண்ணினையுமுடைய அவர் வாழ்கின்ற இடம் பெருமையுடையதென்று சான்றோரால் புகழப்பட்ட மழை போன்று கைம்மாறு கருதாது வாரி வழங்கும் கையை உடையனாகிய சோழனுடைய சொல்லிமலையின் பக்கம் போலும்.

### 2. தொகையுடைமை

பண்பு, தொழில் முதலியன தொக்கு நிற்பது தொகையுவழஷமையாம். பொதுத்தன்மை வெளிப்பட்டு

வாராமல் ஆராய்ந்துணரும்படி மறைந்து நிற்றலுடையது.

**“தாமரை வாண்முகத்துத் தண்டரளம் போன் முறுவல்**

**காமரு வேய்புரைதோட் காரிகையீா் - தேவருவும்**

**பூங்குழலின் வாசம் பொறை சுமந்து நொந்ததோ**

**பாங்குழலுந் தென்றற் பரிசு”**

**விளக்கம்:**

தாமரை போன்ற ஒளியையுடைய முகத்தினையும், குளிர்ச்சியுடைய முத்துப் போன்ற பற்களையும் அழகு பொருந்திய மூங்கில் போன்ற தோளினையும் உடைய பெண்களே! உங்கள் பக்கத்தே உலவுகின்ற தென்றல் காற்றின் தன்மை. உங்களுடைய தேன் பொருந்திய பூக்கள்

நிறைந்த கூந்தலின் கண்ணுண்டாகிய நறுநாற்றப் பாரத்தைத் தாங்கிக் கொண்டு வருகின்ற வருத்தந் தானோ, மெல்லியவுருவுடைத்தானது? சொல்லுவீராக.

### 3. இதர விதரவுவமை

உபமேயம் ஒரு தடைவ உபமானமாகவும், உபமானம் ஒரு தடைவ உபமேயமாகவும் ஒரு தொடர்ச்சிக்

கண்ணேயே வருவது இதர விதர உவமை ஆகும். அ∴தாவது ஒன்றற்கொன்று உவமையாய் உயர்வைக் குறிப்பித்துத் தொடர்ந்து வருமாறு இரண்டு வாக்கியமாக வருவது.

**"களிக்குங் கயல்போலு நுங்கணுங் கண்போல்**

**குளிக்குங் கயலுங் கனிவாய்த் - தளிர்க்கொடியீர்!**

**தாமரைபோன் மலரு நும்முக நும்முகம்போல்**

**தாமரையுஞ் செல்வி தரும்"**

**விளக்கம்:**

கொவ்வைப் பழம் போன்ற வாயினையுடைய தளிரோடு கூடிய கொடி போன்ற பெண்ணே! செருக்கினையுடைய கயல் மீன் போன்ற தன்மையை உடையனவாயிருந்தன உன்னுடைய கண்களானவை. இவ்வியல்பிற்றாய உன்னுடைய கண்களிற்கு உவமையாகின்றன. கயல் மீன்கள் இ∴தன்றி, உன்னுடைய முகமண்டலமானது. தாமரை மலர் போல மலராநின்றது. அவ்வியல் பிற்றாய தாமரை உன்னுடைய முகமண்டலம் போலச் செவ்வியினை உடைத்தாகின்றன.

**"தளிபெற்று வைகிய தன்சுனை நீலம்**

**அளிபெற்றார் கண்போ வலரும் - அளிபெற்ற**

**நல்லார் திருமுகத் தாற்ற நளிபெற்ற**

**கல்லாரம் போன்மலருங் கண்"**

**விளக்கம்:**

மழையை ஏற்றுக் கோடலின் நட்பத்தை உடையதாகிய சுனையிடத்திருக்கின்ற நீலப்பூவானது தலைவனால் நலம் பாராட்டப் பெற்ற பெண்களின் கண்போல் மலரா நின்றது. தலைவனால் அளிசெய்யப்பெற்ற மகளிருடைய அழகிய முக மண்டலத்து மிகக் குளிர்ச்சியையுடைதாகிய கண்களும் நீலம் போல மலரா நின்றன.

### 4. சமுச்சயவுவமை

அப்பொருளையொப்பது இப்பொருளேயன்றி இப்பொருளும் ஒக்கும் என்பது சமுச்சய உவமை ஆகும்.

அதாவது ஒரு பொருள் இரண்டு பொருளோடும் சமமாக ஒத்திருத்தல். சமுச்சயம் - இரண்டு மூன்று பொருள்களின் கூட்டம்.

**“அளவே வடிவொப்ப தன்றியே பச்சை**
**இளவேய் நிறத்தானு மேய்க்கும் - துளவேய்**
**கலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரம்**
**தொலைக்குமரி யேறுகைப்பா டோள்”**

**விளக்கம்:**

துளசி மாலையைச் சூடிய கலைமகளாகிய கன்னி போர்ககளத்துப் பகைவரை நடுங்குமாறு செய்யும் கரிய நிறத்தையுடைய அசுரரின் வீரத்தை அழிக்கும் ஆண்சிங்கத்தை ஊர்தியாக உடையாள் தோளை வளப்பம் மிக்க இளமையான மூங்கிலானது அளவினாலும் வடிவினாலும் ஒப்பதோடன்றிப் பசுமை நிறத்தினாலும் ஒக்கும்.

### 5. உண்மையுவமை

உபமானத்தைக் கூறிப் பின்மறுத்து இதுவே உண்மையென்று உபமேயத்தைக் கூறி முடிப்பது உண்மை உவமை ஆகும்.

**“தாமரை யன்று முகமேயி திங்கிவையும்**
**காமருவண் டல்ல கருநெடுங்கண் - தேமருபு**
**வல்லியி னல்ல ளிவளென் மணங்கவரும்**
**அல்லி மலர்க்கோதை யாள்”**

**விளக்கம்:**

இது தாமரை மரல்ல முகமே, இவையும் அழகு பொருந்திய வண்டல்ல கரிய நீண்ட கண்களே, தேன் பொருந்திய கொடியல்லள் இவள் பெண்ணே, இவ்வியல்பிற்றாய உறுப்புகளை உடைய இவள் என் மனம் விரும்பும் உள்ளிதழ்களை உடைய பூவாலி தொடுக்கப்பட்ட மாலையினை உடையாள்.

## உருவக அணி

**“உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்து**
**ஒன்றெேன மாட்டின துருவக மாகும்”**

**விளக்கம்:**

உபமானப் பொருளையும் உபமேயப் பொருளையும் வேறுபாடின்றி ஒன்றென்று எண்ணுமாறு ஒற்றுமைப் படுத்தின், அ∴து உருவகமென்னும் அணியாம்.

அ.்.தாவது, உபமேயத்தில் உவமானத்தை ஏற்றிக் கூறுதல் உபமானம் உபமேயம் இரண்டிற்கும் பேதம் தோன்றச் சொல்லப்படுவது "உவமையணி" ஆகும்.

### உருவக வகை

**"தொகையே விரியே தொகைவிரி யெனாஅ**
**இயைபே யியைபிலி வியநிலை யெனாஅச்**
**சிறப்பே விரூபகஞ் சமாதான மெனாஅ**
**உருவக மேக மநேகாங்க மெனாஅ**
**முற்றே யவயவ மவயவி யெனாஅச்**
**சொற்றவைம் மூன்று மற்றதன் விரியே"**

**விளக்கம்:**

உருவகவணி 1. தொகையுருவகம், 2. விரியுருவகம், 3. தொகைவிரியுருவகம், 4. இயைபுருவகம், 5. இயைபிலுருவகம், 6. வியநிலை யுருவகம், 7. சிறப்புருவகம், 8. விரூபக வுருவகம், 9. சமாதானவுருவகம், 10. உருவகவுருவகம், 11. ஏகாங்க வுருவகம், 12. அனேகாங்க வுருவகம், 13. முற்றுருவகம், 14. ஆவயவ வுருவகம், 15. ஆவயவி யுருவகம் என பதினைந்து பாகுபாடுடையதாம்.

### 1. தொகை யுருவகம்

'ஆகிய', 'ஆக' வென்னும் தொடர்புண்டாக்குஞ் சொல் ஆண்டு வராது, பின் வருவித்துப் பொருள் காணுமாறு தொகுத்துக் கூறுவது தொகை உருவகம்.

**"அங்கை மலரு மடித்தளிருங் கண்வண்டும்**
**கோங்கை முகிழுங் குடிற்காரும் - தாங்கியதோர்**
**மாதர்க் கொடியுளதா ளண்பா! வதற்கெழுந்த**
**காதற் குளதோ கரை"**

**விளக்கம்:**

அழகிய கையாகிய மலரினையும், அடியாகிய தளிரினையும் கண்ணாகிய வண்டினையும், முலையாகிய அரும்பினையும், கூந்தலாகிய மேகத்தினையுமுடைத்தாய்ப் பிறர்க்குக் காதல் செய்ய வல்லதாயிருப்பதொரு கொடியுளது. நண்பனே! அக்கொடிமேலெழுந்த அன்பிற்கு எல்லை உலகத்து உண்டோவெனில் இல்லையென்பதாம்.

### 2. விரியுருவகம்

ஆகிய, ஆக என்னும் தொடர்புண்டாக்குஞ் சொல் ஆண்டு வந்து தெளிவாகப் பொருள் உணர்த்துவது
விரியுருவகம் ஆகும்.

**"கொங்கை முகைமாக மென்மருங்குல் கொம்பாக**
**அங்கை மலரா வடிதளிராத் - திங்கள்**
**அளிநின்ற மூல லணங்கா மெனக்கு**

**வெளிநின்ற வேனிற் றிரு''**

**விளக்கம்:**

முலை அரும்பாக, மெல்லிய இடை பூங்கொம்பாக, அழகிய கையே மலராக, அடி தளிராக, நிலவு போல வெண்ணிற ஒளியினை உடைத்தாய், என் மேல் வைத்த இரக்கமுடைத்தாகிய நகையினை உடைத்தாய் தோன்றிய அணங்கு போன்றிருந்தாள், எனக்கு இளவேனிற் காலத்தைக் கொண்டு வெளிப்பட்ட திருமகனை ஒப்பாள்.

தோகை, விரி என்னும் இவையிரண்டும் எல்லாவற்றிற்கும் பொதுவிலக்கணம் இவ்விரண்டினுள் தொகையை முற்கூறியது. உவமையை உணர்த்தும் நூற்பாவில் தொகையுவமையை முன் வைத்திருப்பதாக அவற்றோடு மரண்படாமை நோக்கி "முந்து மொழிந்தது தலை தடுமாற்றம்" என்னும் தந்திரவுத்தியான் என்பதாம்.

## 3. தொகை விரியுருவகம்

ஆகிய. ஆக என்னும் தொடர்புணர்த்துஞ் சொற்கள் தொக்கும் விரிந்தும் நிற்பது தொகை விரியுருவகம்
ஆகும்.

**''வையற் தகழியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடராழி யானடிக்கே சூட்டுவன் சொன்மாலை**
**இடராழி நீங்கவே யென்று''**

**விளக்கம்:**

உலகமே பெரிய மட்பாண்டமாகவும், பெரிய கடலே அவற்றினுள் இருக்கும் நெறியாகவும், வெம்மையுடைய கதிரவனே விளக்காகவும் செந்நிறத்தை உடைத்தாகிய சக்கரத்தை உடையவனாகிய திருமாலின் அடிக்கே சார்த்துவேன். சொல்லினால் கட்டப்பட்ட மாலையை என்னுடைய துன்பமாகிய கடல் வற்றிப் போவதாக என்று.

இங்கே 'இடராழி' என்பது தொகையுருவகம் மற்றது விரியுருவகம்.

## 4. இயைபுருவகம்

பல பொருளை உருவகஞ் செய்யுமிடத்து, அப்பொருள் தம்முள் இயைபுடையவாக வைத்து உருவகஞ்
செய்வது இயைபுருவகம் ஆகும்.

**''செவ்வாய்த் தளிரு நகைமுகிழுங் கண்மலரும்**
**மைவா ரளக மதுகரமும் - செல்லி**
**உடைத்தாந் திருமுகமென் னுள்ளதது வைத்தார்**
**துடைத்தாரே யன்றோ துயர்''**

**விளக்கம்:**

சிவந்த வாயாகிய தளிரினையும், பற்களாகிய முல்லை அரும்பினையும், கண்ணாகிய மலரினையும் "கரிய நெடிய" கூந்தலாகிய வண்டினையும், செவ்வினையுமுடைய கண்டாரால்

விரும்பப்படும் தன்மையுடைத்தாகிய முகத்தை என் உள்ளத்திலே வைத்தார். இதனாலே என்னுள்ளத்தில் உண்டாகிய துன்பத்தை, நீக்குவாரன்றோ, சொல்லுவீராக.

தளிரும்; மொட்டும் மலரும், வண்டும் தம்முள் இயைபுடைமையின் இயைபுருவகமாயிற்று.

## 5. தீவக அணி

தீவகவணி என்பது ஓரிடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது, பலவிடங்களுக்கும் சென்று பொருள்களை விளக்குதல் போல, இதுவும் ஓரிடத்து நின்று பலவிடங்களிலும் சென்று பொருள்களை விளக்குவது ஆகும்.

**"குணந்தொழில் சாதி பொருள்குறித் தொருசொல்**

**ஒருவயி னின்றும் பலவயிற் பொருடரின்**

**தீவகம் செய்யுள் மூவிடத் தியலும்"**

**விளக்கம்:**

குணம், தொழில், சாதி, பொருள் ஆகிய நான்கனுள் யாதானும் ஒன்றைக் குறித்து ஒரு சொல் ஓரிடத்து நின்று செய்யுளில் பலவிடத்து நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளைப்பது தீவகமென்னும் அணியாம். அது முதனிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என மூன்றாகி நடக்கும்.

எனவே முதனிலை, இடைநிலை, கடைநிலை மூன்றையும் குணம், தொழில், சாதி, பொருள் எனும் நான்கனுடன் கூட்டி யுறழப் பன்னிரண்டாம்.

### 1. முதனிலைக் குணத்தீவகம்

முதற்கண் உள்ள பண்புணர்த்தும் சொல் ஏனைய சொற்களுடனும் சென்று பொருந்தி பொருளுணர்த்துவது முதனிலைக் குணத்தீவகம் ஆகும்.

**"சேந்தன வேந்தன் றிருநெடுங்கண் தெவ்வேந்தர்**

**ஏந்து தடந்தோ ளிழிகுருதி – பாய்ந்து**

**திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பும்**

**மிசையனைத்தும் புட்குலமும் வீழ்ந்து"**

**விளக்கம்:**

அரசனது அழகிய நீண்ட கண்கள் சிவந்தன. மாற்றரசர்களுடைய உயர்ந்த பெரிய தோள்கள் சிவந்தன. பெருகி வருகின்ற இரத்தம் பாய்தலால் திசைகள் சிவந்தன. வன்மையுடைய வல்லினாற் சொரியப்பட்ட அம்புகள் சிவந்தன. அந்த இரத்தம் மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும் சிவந்தன.

இதில் முதலில் உள்ள சேந்தன என்னும் பண்பு, கண், தோள், திசை, அம்பு, பறவைக் கூட்டம் ஆகியவற்றோடும் சேர்ந்து பொருளுணர்த்தினமையால், இது முதனிலைக் குணத் தீவகமாம். சேந்தன் என்னுஞ் சொல் வினைச் சொல்லாயினும் அதனால் உணர்த்தும் பொருள் செந்நிறமாகிய

பண்பாகலின் அது பண்பெனப்பட்டது. சேந்தன் என்னும் சொல்லும் செம்மை என்னும் பண்புப் பெயரினடியாகப் பிறந்த வினைச் சொல்லாதலையும் அறிக.

## 2. முதனிலைத் தொழிற்தீவகம்

முதற்கண் நிற்கும் தொழிலையுணர்த்துஞ் சொல் ஏனைய சொற்களோடும் சென்றியைந்து பொருளை
உணர்த்துவது முதனிலைத் தொழில் தீவகம் ஆகும்.

**"சரியும் புனைசங்குந் தண்டளிர்போல் மேனி**
**வரியும் தனநடஞ்சூழ் வம்பும் - திருமான**
**வாரந் தழுவுந் தடந்தோ ளகளங்கன்**
**கோரந் தொழுத கொடிக்கு"**

**விளக்கம்:**

திருமகள் அமர்ந்துறையும் மேன்மையினை உடைய முத்துமாலையை அணிந்த பெருமையுடைய தோள்களை உடைய குற்றமில்லாத சோழனுடைய குதிரையைத் தொழுத பூங்கொடியைப் போன்றவளாகிய பெண்ணுக்கு அணிந்த வளையல்களும் சரிந்தன. தட்பம் பொருந்திய தளிரைப் போன்ற உடலின் அழகும் சரிந்தன. பெரிய முலைகளிற் கட்டிய கச்சும் சரிந்தது.

சோழ அரசன் உலாப்போன காட்சியைக் கண்ட நங்கை ஒருத்தி அவன்பால் தனக்குண்டாகிய வேட்கையை ஆற்றாளாகி உடல் மெலிந்து, கை வளையல் கழன்றுவிடி, உடலின் அழகு குறையக் கச்சுக் கட்டவிழ நின்றனள் என்பது இப்பாடலின் கருத்து, இப்பாடலுள் முதற்கண் நின்ற சரியும் என்னும் தொழிலுணர்த்துந் சொல் வளையல், அழகு, கச்சு ஆகியவற்றுடன் இயைந்து பொருள் புலப்படுத்தினமையால் இது முதனிலைத் தொழிற் தீவகம் ஆயிற்று.

## 3. முதனிலைச் சாதிச் தீவகம்

முதற்கண் சாதியையுணர்த்தும் சொல் நின்று, ஏனைய சொற்களோடும் சென்றியைந்து பொருள் புலப்படச் செய்தல் முதனிலைச் சாதித் தீவகம் ஆகும்.

**"தென்ற லனங்கன் றுணையாம் சிலகொம்பர்**
**மற்றற் றலைமகனாம் வான்பொருண் மேற்சென்றவர்க்கு**
**சாற்றிவிடுந் தாகும் தங்கும் பெரும்புலவி**
**மாற்ற வருவிருந்து மாம்.**

**விளக்கம்:**

தென்றல் காற்றானது, மண் மதனுக்குத் துணையாகும், சில பூங்கொம்பர்களுக்குத் (தான் வந்து தண்டியவளவில் அவற்றைத் தழைக்கச் செய்தலால்) மணம் புரிந்து கொண்ட தலைவனாகும். சிறந்த பொருளின்மேற் காதல் கொண்டு பிரிந்து சென்ற தலைவர்களுக்கு அவர்களது வருத்தங்களைச் சொல்லும்படி அனுப்பப்பட்ட தூதாகும். அவ்வூடலைப் போக்க வந்த புதுமகனுமாகும்.

இதில் கொண்டல், கோடை, தென்றல் எனும் பல்வகையின. காற்றில் ஒன்றாகிய தென்றல் முதற்கண் நின்று "துணையாம்" என்பது முதலியவற்றோடு சென்று பொருந்திப் பொருள் புலப்படுத்தியமையால் இது முதனிலைச் சாதித் தீவகம் எனக் கூறப்படுகிறது.

## 4. முதனிலைப் பொருள் தீவகம்

முதலில் நிற்கும் பொருட்பெயர் ஏனைய சொற்களோடும் சென்று பொருந்திப் பொருள் புலப்படுத்துவது முதனிலைப் பொருள் தீவகம் ஆகும்.

**“முருகவேள் சூர்மா முதறடித்தான் வள்ளி**
**புரிகுழன்மேன் மாலை புனைந்தான் - சரணளித்து**
**மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்**
**வேலா னிடைகிழித்தான் வெற்பு”**

**விளக்கம்:**

முருகன் சூரபத்மனாகிய மாமரத்தை அடியோடு சாய்த்தான். வள்ளியனுடைய சுருண்ட குழலின் கண் மாலையைச் சூட்டினான். அடைக்கலமாக நின்று மேன்மை மிக்க தேவர்களினுடைய திரண்ட பெருஞ் சேரனையைக் காத்தருளினான். வேலாயுதத்தினாலே (கிரௌஞ்ச கிரியை) இடையிலே பிளந்தான்.

முருகவேள் என்னும் பொருட்பெயர் தடிந்தான். புனைந்தான், தாங்கினான், கிழித்தான் என்பனவற்றோடு சென்று பொருந்திய பொருட் புலப்படுத்தினமையால் இது முதனிலைப் பொருள் தீவகம் ஆயிற்று.

## 5. பின்வரு நிலையணி

**“முன்வரும் சொல்லும் பொருளும் பலவயிற்**
**பின்வரும் என்னிற் பின்வரு நிலையே”**

**விளக்கம்:**

ஒரு செய்யுளுள், முன்னர் வந்த சொல்லாவது பொருளாவது, பின்னரும் பல விடத்தும் ஒரு செய்யுளில் வருமாயின், அது “பின்பருநிலை” என்னும் அணியாம்.

### 1. சொற்பின்வருநிலை

முன்வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து பொருள் வேறு உணர்த்துவது சொற்பின்வருநிலை ஆகும்.

**“மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்**
**மால் வரைந்தோ ளாதரித்த மாலையார் - மாலிருள்சூழ்**
**மாலையின் மால்கட லார்ப்ப மதன்றொருக்கு**
**மாலையின் வாளி மலர்”**

**விளக்கம்:**

மதத்தால் மயக்கமுற்ற யானையினுடைய துன்பத்தைப் போக்கி அருள் செய்த திருமாலுடைய மாலை சூழப்பட்ட பெரிய மலையைப் போன்ற தோளை விரும்பிய தன்மையுடைய யார்மேல், மயங்கும்

இருட்பொழுது சூழ்ந்த அந்திப் பொழுதில் கருங்கடல் ஒலிக்கக் காமன் இடைவிடாது மலராகிய அம்புகளைத் தொடுப்பான்.

"மால்" என்னும் முன்வந்த சொல்லே, பின்னும் பலவிடத்தும் வந்து பொருள் வேறு உணர்தின.

## 2. பொருட் பின்வருநிலையணி

ஒரு பொருளே பின்னும் வருமாறு சொற்கள் அமைந்து வருவது பொருட்பின்வருநிலை அணியாகும்.

**"அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா**
**நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திதழ்**
**விண்டன கொன்றை விரிந்த கருவிளை**
**கொண்டன காந்தள் குலை"**

**விளக்கம்:**

கார்த்திகைப் பூக்கள் மலர்ந்தன, காயாம் பூக்கள் மலர்ந்தன அழகிய அரும்புகளையுடைய முல்லைகள் மலர்ந்தன. கொன்றைப் பூக்கள் தட்பமுற்று இதழ்கள் மலர்ந்தன. கருவிளை மலர்கள் மலர்ந்தன. காந்தள் குலைகளை எடுத்தன.

அவிழ்தலும், அலர்தலும், நெகிழ்தலும், விள்ளலும், விரிதலும் "மலர்தல்" என்னும் ஒரு பொருளின் மேல் நின்றன. ஆதலின், பொருட்பின்பருநிலையணி ஆயிற்று.

நூற்பாவில் "வருவரு" என்று கூறாது. "வருமென்னின்" என்று கூறியவதனான், முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலவிடத்தும் தருவது. "சொற்பொருட்பின்வருநிலையணி" ஆகும்.

## 3. சொற்பொருட் பின்வருநிலையணி

முன்வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து ஒரு பொருளே தருமாறு அமைவது, சொற்பொருட்பின்வருநிலை அணியாகும்.

**"வைகலும் வைகல் வரக்கண்டு ம∴துணரார்**
**வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்**
**வைகலும் வைகற்றம் தாழ்நாள்மேல் வைகுதல்**
**வைகலும் வைத்துணரா தார்"**

**விளக்கம்:**

நாடொறும் பொழுது கழிதலைத் தமது ஆயுளின் மேல் தங்குதலாக வைத்து, அப்பொழுது கழிவை உணரும் இயல்பில்லாதவர்கள், நாடொறும் பொழுது கழிவு வருவதைக் கண்கூடாகக் கண்டிருந்தும், அப்பொழுது கழிவை உணர்த்து துன்புறாமல், நாடொறும் அப்பொழுது கழிவைத் தட்டுபாடியின்றிக் கழியா நிற்கும் என்று மகிழ்வல்.

இதனுள் “வைதல்” என்னும் முன்வந்த சொல் பின்னும் பலவிடத்தும் வந்து ஒரு பொருளே காட்டினமையின் இது “சொற்பொருள் பின்வருநிலை அணியாம்”.

### 4. உவமைப் பொருட் பின்வருநிலையணி

ஒரு பொருளையே பின்னும் உணர்த்தும் பல சொற்கள் வந்து அவை பலபொருட்களுக்குஉவமையாய்
வருவது உவமைப் பொருட் பின்வருநிலை அணியாகும்.

**“செங்கமல நாட்டம் செழுந்தா மரைவதனம்**
**பங்கயம் செவ்வாய் பதுமம்போல – செங்கரங்கள்**
**அம்போ ருகந்தா ளரவிந்த மாரனார்**
**தம்போர் உகந்தாள் தனம்”**

**விளக்கம்:**

மன்மதனது அழகிய போரை விரும்பியவளது கண்கள், செவ்விய தாமரை மலரைப்போல்வனவாம், முகம் செழுமையுடைய தாமரையைப் போல்வதாம், செந்நிறவாய் தாமரையைப் போல்வதாம், சிவந்த கைகள் தாமரையைப் போல்வனவாம், திருவடிகள் தாமரையைப் போல்வனவாம், முலைகள் தாமரையைப் போல்வனவாம்.

இதனுள், “கமலம்”, “தாமரை”, “பங்கயம்”, “பதுமம்”, “அம்பொருகம்”, “அரவிந்தம்” என்றும் சொற்கள் “தாமரை” என்னும் ஒரு பொருளையே உணர்த்தி நின்றன. எனவே, இது பொருட்பின்வருநிலையணியாம். அவை கண்கள் முதலிய உறுப்புகளுக்கு உவமையாய் வந்தமையின் இது உவமைப் பொருட்பின்வருநிலையணி என்று கூறப்படும்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தளை வகைகள் யாவை? | K2 | CO2 | PO4 |
| 2 | ஆசிரியப்பாபொது இலக்கணம் கூறுக. | K4 | CO3 | PO5 |
| 3 | இன்னிசைவெண்பாகுறித்துவிளக்குக. | K1 | CO4 | PO1 |
| 4 | யாப்பின் பா வகைகள் யாவை? அவற்றைவரையறுக்க. | K5 | CO5 | PO2 |
| 5 | ஆசிரியப்பாபொது இலக்கணம் கூறு. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | பாக்களுக்குரியஓசைகுறித்துகட்டுரைவரைக. | K1 | CO4 | PO4 |
| 2 | குறள் வெண்பாவின் இனங்கள் குறித்துஎடுத்துரைக்க. | K4 | CO2 | PO6 |
| 3 | ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் கூறி வகைப்படுத்து. | K3 | CO1 | PO5 |
| 4 | இன்னிசைவெண்பா, ப:்.றொடைவெண்பாகுறித்துஎழுதுக. | K2 | CO5 | PO6 |
| 5 | வெண்பாஎன்றால் என்ன? வெண்பாவின் இனங்களை கூறி வகைப்படுத்துக. | K4 | CO3 | PO3 |

## அலகு – 3

## 6. முன்னவிலக்கணி

**"முன்னத்தின் மறுப்பினது முன்ன விலக்கே**
**மூவகைக் காலமும் மேவிய தாகும்"**

**விளக்கம்:**

ஒரு பொருளை குறிப்பினால், விலக்கினால் அது முன்ன விலக்கென்னும் அணியாம். இது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூவகைப்பட்ட காலங்களோடும் கூடியதாகும்.

நூற்பாவில் 'மறுப்பது' என்னாது 'மறுப்பின்' என்று கூறியதனால், கூற்றினால் மறுப்பினும் அவ்வணியாம். குறிப்பினால் மறுப்பது, பொருளழகும் செய்யுட் சிறப்பும் நோக்கி எடுத்தோதினார். ஏனையது அத்தன்மையது அல்லாமையின், இலேசான் ஒப்பினர் என்பதாம்.

### 1. இறந்தகால விலக்கு

இறந்த காலத்து நடந்த வினையை விலக்கிக் கூறுவது இறந்த கால விலக்கு ஆகும்.

**"பாலன் தனதுருவாய் ஏழுலகுண் டாலிலையின்**

**மேலன்று கண்துயின்றாய் மெய்யன்பர் - ஆலன்று**
**மேலைநீ குள்ளதோ விண்ணதோ மண்ணதோ**
**சோலைசூழ் குன்றெழுத்தாய் சொல்"**

**விளக்கம்:**

சோலை சூழ்ந்த குன்றத்தைக் குடையாய் எடுத்த மாயவனே நீ உலகம் ஏழையும் உண்டு குழந்தை உருவத்தைக் கொண்டு ஆலின் இலையிலே உறங்கினாய் என்பது உலகத்துள்ளோர் மெய்யன்று சொல்வர். நீ உலகத்தை உண்டு உறங்கிய ஆலமரமானது, அன்று கடலுள்ளே நின்றதோ? மண்ணிலே நின்றதோ? விண்ணிலே நின்றதோ? சொல்வாயாக.

## 2. எதிர்கால விலக்கு

எதிர்காலத்தில் நிகழக் கூடியவற்றை முன்னரே கூறுதல் பொருந்தாது என விலக்குவது எதிர்கால
விலக்கு ஆகும்.

**"முல்லை கொடிநடுங்க மொய்காந்தள் கைகுலைப்ப**
**எல்லை யினவண் டெழுந்திரங்க – மெல்லியன்மேல்**
**தீவாய் நெடுவாடை வந்தாற் செயலறியோர்**
**போவாய் ஒழிவாய் பொருட்கு"**

**விளக்கம்:**

தலைமகனே! முல்லைக் கொடியானது நடுங்க, நெருங்கிய காந்தள் மலரானது விரிய, ஒளியுடைய வண்டின் கூட்டங்கள் எழுந்து ஒலிக்க தீயையுடைய நெடிய வாடையானது மென்னாடையாயை இவள் மேல் வந்தால் பின் விளைவனவற்றை அறியமாட்டேன். ஆதலின், பொருளீட்டுதற்குப் போதலை ஒழிவாயாக.

## 3. நிகழ்கால விலக்கு

நிகழ்காலத்தில் நடைபெறும் வினையே பொருந்தாது என விலக்குவது நிகழ்கால விலக்கு ஆகும்.

**"மாதர் நுழைமருங்கல் நோவ மணிக்குழைசேர்**
**காதின் மிகைநீலம் கைபுனைவீர் - மீதுலவு**
**நீணீலே வாட்கண் நெடுங்கடையே செய்யாவோ**
**நாணீலம் செய்ய நலம்"**

**விளக்கம்:**

விருப்பத்தை வளர்க்கும் நுண்ணிய இடையானது வருந்த, மணியாலாகிய குழை என்னும் காதணியை உமது காதின் மீது மிகையாக நீலப் பூவைச் சாத்துகின்றவரே! ஆக்காதின் மீது உலாவுகின்ற நீண்ட நீல நிறத்தை உடைய கண்களின் நெடிய கடையே செய்யாவோ நீவிர் நன்றாகச் சூடிய நீலப்பூவின் அழகை

**"அதுவே,**

**பொருள் குணம் காரணம் காரியம் புணரும்"**

**விளக்கம்:**

மேற்கூறிய முன்னவிலக்கு என்னும் அணியே பொருள் விலக்கணி, குணவிலக்கணி, காரண விலக்கணி, காரிய விலக்கணி என நான்கு வகையானும் வரும்.

## வகைகள்

### 4. பொருள் விலக்கு

உண்மைப் பொருளினை விலக்கிப் பிறிதொன்றினைப் புலப்படுத்தல் பொருள் விலக்கு ஆகும்.

**"கண்ணு மனமும் கவர்ந்தவள் ஆடிடமென்று**
**அண்ணல் அருளும் அடையாளம் - தண்ணிழலின்**
**சுற்றெல்லை கொண்டுலவும் சோதித் திரளல்லால்**
**மற்றில்லை காணும் வடிவு"**

**விளக்கம்:**

நம்முடைய தலைவன், தன்னுடைய கண்களையும் மனத்தையும் கவர்ந்து கொண்ட மடப்பம் பொருந்தியவள் விளையாடும் இடமென்று நமக்கு அருளிச் செய்த சோலையின் கண் உண்டாக்கிய குளிர்ந்த நிழலைச் சேர்ந்த சூழலிடத்தைக் கைக்கொண்டு உலாவித் திரிவதொரு ஒளிவடிவமல்லது அவ்வொளி வடிவின் உறுப்புக்களைக் காண்பதற்கு அரிதாயிருந்தது. இஃது ஓர் உருவத்தன்மை இருந்தவாறு.

### 5. குணவிலக்கு

பல குணங்களை எடுத்துக் காட்டிப்பின் விலக்கிப் பிறிதொரு குணத்தைத் தேடுதல் குணவிலக்கு

ஆகும்.

**"மாதா் துவரிதழ்வாய் வந்தென் னுயிா்கவரும்**
**சீத முறுவல் அறிவழிக்கும் - மீதுலவி**
**நீண்ட மதா்விழியென் னெஞ்சம் கிழித்துலவும்**
**யாண்டையதோ மென்மை யிவா்க்கு"**

**விளக்கம்:**

இவருடைய அழகிய பவளம் போன்ற வாயானது என்னுடைய உயிரை வந்து கவருகின்றது. குளிா்ந்த நகையானது அறிவை அழிக்கின்றது. காதின் மீது உலாவி அழகுடன் நீண்ட விழியானது என்னுடைய உள்ளத்தைக் கிழித்து உலவா நின்றது. ஆதலால் இவா்க்கு மென்மைத்தன்மை யாண்டுளதோ சொல்வாயாக.

## 6. காரண விலக்கு

நிகழ்கின்ற காரியத்திற்கு இருக்க வேண்டிய மெய்ப்பாடு இல்லாமைக்குரிய காரணத்தை எடுத்துக்
விலக்குதல் காரண விலக்கு ஆகும்.

**"மாதரரிக் கண்சிவப்ப வாா்புருவங் கோட**
**அதரம் துடிப்ப வணிசோ் - நுதல்வியா்ப்ப**
**நின்பால் நிகழ்வனகண்டு அஞ்சாதா லென்னெஞ்சம்**
**என்பால் தவறின்மை யால்".**

**விளக்கம்:**

பெண்ணே! செல்வரி பரந்து அழகுற்ற கண் சிவப்ப, நீண்ட புருவம் வளைய, அதரம் துடிக்க, அழகு சோ்ந்த நெற்றியானது வியா்ப்ப, உன்னிடத்தில் நிகழ்வனவற்றைக் கண்டு என்னுடைய நெஞ்சம் அஞ்சமாட்டாது என்பால் குற்றமில்லாமையால்.

## 7. காரிய விலக்கு

நிகழ்கின்ற காரணங்களுக்கு ஏற்புடைத்தான காரியத்தை நிகழாமை காட்டி விலக்குதல் காரிய விலக்கு ஆகும்.

**"மன்னவா் சேயா மயிலகவி யாடலும்**
**பொன்னலரும் கொன்றையும் பூந்தாயின் - மென்மலரும்**
**இன்னுயிரா நீண்முகிலு மெய்யென்று கொள்வதேல்**
**என்னுயிரோ வின்னும் உளது"**

**விளக்கம்:**

நம் காதலர் சேய்மையான நாட்டினத்து உளதாம் போது, மயிற் கூட்டங்கள் கூவியாடுதலும், கொன்றைகள் பொன் போல் மலர்தலும் அழகிய முல்லையின் மென்மையான மலரும் மின்னலைக் கொடுக்கின்ற பெருமைக்குரிய எழிலியுமாகிய இவை மெய்யென்று கொள்வோமானால் என்னுயிரோ இன்னும் உடலோடு பொருந்தி நின்றது.

## 7. வேற்றுமைப் பொருள் வைப்பணி

**"முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்**
**பின்னொரு பொருளை யுலகறி பெற்றி**
**ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப் பொருள்வைப்பே"**

**விளக்கம்:**

முன்னர் ஒரு பொருளின் தன்மையைக் கூறத் தொடங்கிப் பின்னர் அது முடித்தற்கு வலியுடைய பிறிதொரு பொருளை உலகறிந்த பெருமையுடையனவாக வைத்துச் சொல்வது வேற்றுப் பொருள் வைப்பணியாகும்.

**"முழுவதுஞ் சேறல் ஒருவழிச் சேறல்**
**முரணித் தோன்றல் சிலேடையின் முடித்தல்**
**கூடா வியற்கை கூடும் இயற்கை**
**இருமை யியற்கை விபரீதப் படுத்தலென்று**
**இன்னவை யெட்டும் அதனது இயல்பே"**

**விளக்கம்:**

முழுவதுஞ் சேறலும், ஒருவழிச் சேறலும், முரணித் தோன்றலும், சிலேடையின் முடித்தலும், கூடாவியற்கையும், கூடுமியற்கையும், இருமையியற்கையும், விபரீதப் படுத்தலும் என எட்டு வகையான வரும் வேற்றுப் பொருள் வைப்பணி.

### 1. முழுவதுஞ் சேறல்

ஒரு கோட்பாட்டினை உரைத்தல், அக்கோட்பாடு எல்லாவற்றின் மெலும் முழுவதும் சொல்லுமாறு
உரைப்பது முழுவதும் சேறல்.

**"புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்**

**சிறந்த வொளிவளர்க்கும் தேரோன் - மறைந்தான்**
**புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி**
**இறவாது வாழ்கின்றார் யார்"**

**விளக்கம்:**

இருளைப் புறங்காட்டி ஒருமாறு அழகிய சக்கரத்தைச் செலுத்திச் சிறந்த ஒளியை மிகுவிக்கும் தேரை உடையவனாகிய பரிதி மறைந்தான் புறத்தே கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் இறவாமல் வாழ்பவர் யார்?

## 2. ஒருவழிச் சேறல்

ஒரு கொட்பாட்டினை உரைத்தல், அக்கோட்பாடு எல்லாவற்றின் மேலும் முழுவதும் செல்லாது, சிலவற்றின் மேலே மட்டும் சென்று முற்றுப் பெறுவது ஒருவழிச் சேறல்.

**"எண்ணும் பயன்தூக்காது யார்க்கும் வரையாது**
**மண்ணுலகில் வாம னருள்வளர்க்கும் - மின்னுறந்தேன்**
**பூந்தளிக்கும் தாராய புகழாளர்க் கெவ்வுயிரும்**
**காத்தளிக்கை யன்றோ கடன்"**

**விளக்கம்:**

மண்ணுலகில் திருமால் கருதப்படும் பயனொன்றையும் நினையாமல், யாவர்க்கும் வரையறையில்லாமல் கருணையை வளர்ப்பவன், குளிர்ந்த நல்லதேனை மலர்ந்து கொடுக்கின்ற மாலையை உடையவனே! புகழை உடையவர்களுக்குக் கடமையாவது எல்லாவுயிர்களையும் காத்தளிப்பதல்லா?

இதில், "அருள் வளர்க்கும் பெற்றமை திருமால் அளவிலே சென்று முற்றுப் பெற்றமையின் ஒருவழிச் சேறலாயிற்று", "வாமன்" என்பது திருமாலையே அன்றி, அருகன், சிவன் ஆகிய இவர்கட்கும் பெயராய் வழங்கும்.

## 3. முரணித் தோன்றல்

தம்முள் மாறுபடும் தன்மைத்தாகிய பொருள் அமைந்திருப்பது முரணித் தோன்றல்.

**"வெய்ய குரல்தோன்றி வெஞ்சினஏறு உட்கொளினும்**
**பெய்யு முகில்தன்மைப் பேணுவரால் - வையத்து**
**இருள் பொழியும் குற்றம் பலவரினும் யார்க்கும்**
**பொருள் பொழிவார் மேற்றே புகழ்"**

**விளக்கம்:**

கொடிய இடியோரையைத் தோற்றுவித்து மிக்க கொடுமையான இடியை உட்கொண்டிருந்தாலும், மழைப் பொழியும் மேகத்தை யாவரும் விரும்புவர் யாவர்க்கும் புகழ்தல் இருளினது தன்மையனைய பல குற்றங்கள் உளவாயினும் பொருளைச் சொரிவார் மேலதேயாம்.

### 4. சிலேடையின் முடித்தல்

முன்னே வைத்த பொருளையும் பின்னே வைத்த பொருளையும் ஒரு சொற்றோடரிலேயே சொல்லி
முடிப்பது சிலேடையின் முடித்தல்.

**"எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த**
**முற்றிழையாள் வாட முறுவலிக்கும் - முற்று**
**முடியாப் பரவை முழங்குலகத் தென்றும்**
**கொடியார்க்கு முண்டோ குணம்"**

**விளக்கம்:**

முல்லைக் கொடியானது தன்னை வளர்த்தெடுத்த முற்றுப்பெற அழகுறுத்தப்பட்ட அணிகளை அணிந்த தலைவி மனம் வாடும்படி செய்கிறது என்றும் முடிவினைக் காணாத கடல் முழங்கிக் கொண்டிருக்கும் இவ்வுலகத்தில் கொடியவர்களுக்கும் குணமுண்டோ?

இதில் "கொடியார்" என்றது முல்லைக் கொடிகளையும் கொடியவர்களையும் உணர்த்தியது. எனவே கொடுமையுடையார்க்கும் கொடிக்கும் சிலேடை வந்தவற்றைக் காண்க.

### 8. வேற்றுமையணி

**"கூற்றிலும் குறிப்பினும் ஒப்புடை யிருபொருள்**
**வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே"**

**விளக்கம்:**

கூற்றினாலும், குறிப்பினாலும் ஒப்புடைய இரு பொருளை ஒரு பொருளாக வைத்து, இவற்றைத் தம்முள் வேற்றுமைப்படச் சொல்லுவது வேற்றுமையென்னும் அணியாம்.

நூற்பாவில், "வேற்றுமை" என்று கூறியதோடு அமையாது. "அதுவே" என்று மிகையாகக் கூறியதனால், அவை ஒரு பொருளால் வேற்றுமை செய்தலும், இரு பொருளால் வேற்றுமை செய்தலும்

உடையன. அல்லது, அம் மிகையானே வேற்றுமைப்படக் கூறுதலோடன்றி, ஒன்றைக் காட்டிலும் ஒன்று மிகுதிபடக் கூறவும்படும்.

## 9. விபாவனையணி

**“உலகறி காரணம் ஒழித்தொன்று உரைப்புழி**
**வேறொரு காரணம் இயல்பு குறிப்பின்**
**வெளிப்பட உரைப்பது விபாவனை யாகும்”**

**விளக்கம்:**

ஒன்றன் வினையை உரைக்குமிடத்து அவ்வினைக்குப் பலரும் அறிய வரும் காரண மொழிந்துப், பிறிதொரு காரணத்தான் வெளிப்படையாகவும், குறிப்பாகவும் கூறுவது விபாவனை அணியாம்.

### 1. அயற்காரண விபாவனை

எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்புடைக் காரணமின்றிப் பிறிதோர் காரணத்தான் சிறப்பிக்கப்படுதல்
அயற்காரண விபாவனையாகும்.

**“தீயின்றி வேம்தமியோர் சிந்தை செழுந்தேறல்**
**வாயின்றி மஞ்ஞை மகிழ்ர்ங்கும் - வாயிலார்**
**இன்றிச் சிலர்ஊடல் தீர்ந்தார் அமரின்றிக்**
**கன்றிச் சிலைவளைக்கும் கார்”**

**விளக்கம்:**

துணையாவாரைப் பிரிந்து தனித்திருக்கும் காமவிழைவுடைய மகளிரது உள்ளமானது, நெருப்பின்றியே வேகும், மயில்கள் செழுமையான தேனை வாயிற் கொள்ளாமலே களிப்புற்று ஆகும். சில மகளிர் ஊடல் போக்குவார் இல்லாமலே பிணக்கொழிந்தார்கள். மேகமானது, போரில்லாமலே வெகுண்டு வில்லை வளையாநிற்கும்.

### 2. இயல்பு விபாவனை

அமைந்து கிடக்கும் இயல்பினைச் சிறப்பித்துக் காட்டல் இயல்பு விபாவனை ஆகும்.

**“கடையாமே கூர்த்த கருநெடுங்கண் தேடிப்**

**படையாமே யேயிந்ததனம் பாவாய்! — கடைஞெமிரக்**
**கோட்டாமே கோடும் புருவம் குலிகச்சோறு**
**ஆட்டமே சேந்த அடி''**

**விளக்கம்:**

பாவாய்! உன்னுடைய நீண்ட கரிய கடைக்கண்கள் எவரும் கடையாமலே கூர்மையைப் பெற்றன. முலைகள், ஆராய்ந்து செய்யாமலே தகுதி வாய்ந்த உருவத்தோடு பொருந்தின. புருவங்கள், கடைப்பகுதி வளைவு அழுங்கும்படி வளைக்கப் படாமலே வளைவுற்றன. அடிகள் சாதிலிங்கக் குழம்பில் தோய்க்கப்படாமலே சிவப்புற்றன.

## 10. ஒட்டணி

**''கருதிய பொருள்தொகுத் ததுபுலப் படுத்தற்கு**
**ஒத்ததொன்று உரைப்பின தொட்டென மொழிப''**

**விளக்கம்:**

புலவன், தன்னால் கருதப்பட்ட பொருளை மறைத்து, அதனை வெளிப்படுத்தற்குத் தகுதியுடைய பிறிதொன்றினைச் சொல்லின் அஃது ஒட்டு என்னும் அணியாம்.

**''அதுவே**
**அடையும் பொருளும் அயல்பட மொழிதலும்**
**அடைபொது வாக்கி யாங்ஙன மொழிதலும்**
**விரவத் தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்**
**எனநால் வகையினும் இயலும் என்ப''**

**விளக்கம்:**

மேலே கூறி ஒட்டு என்னும் அணி, கூறுகின்ற பொருளும் அதனது அடையும் வேறுபட மொழிகலும் அடை பொதுவாக்குப் பொருள் வேறுபடமொழிதலும் அடைவிரவி பொருள் வேறுபட மொழிதலும், அடையைத் திரிபுபடுத்திப் பொருள் வேறுபட மொழிதலும் என நான்கு வகையினை உடைத்து.

### 1. அடையும் பொருளும் அயல்பட மொழிதல்

அடையையும் பொருளையும் அயலாகுமாறு கூறுதல் இதுவாகும்.

**''வெறிகொள் இனச்சுரும்பு மேவியதோர் காவிக்**

**குறைபடுதேன் வேட்டுங் குறுகும் - நிறைமது சேர்ந்து**
**உண்டாகும் தன்முகத்தே செவ்வி யுடையதோர்**
**வண்டா மரைபிரிந்த வண்டு"**

**விளக்கம்:**

தன்னிடத்து அழகையும் வளப்பத்தையுமுடைய தாமரைக் கண் குறைவற்ற நிறைந்த தேனைப் பெற்று உண்டு களித்து விளையாடுகின்ற வண்டும் களித்த பல வண்டுகள் சேர்ந்து உண்டு வெறுத்து நீக்கிய குறைபட்ட கருங்குவளையின் தேனை விரும்பிச் சேருமோ?

இது பரத்தையிற் பிரிந்துறைந்து மீண்ட தலைமகனுக்கு வாயில் உடன்பட்ட தோழி கூறியது.

### 2. அடைப்பொதுவாக்கிப் பொருள் வேறுபடமொழிதல்

அடைமொழிகளைப் பொதுவாக வைத்துப் பொருளை மட்டும் வேறுபடக் கூறுதல் இதுவாகும்.

**"உன்னிலவு நீர்மைத்தாய் லுவாப் பயன்சுரந்து**
**தண்ணளி தாங்கு மலர்முகத்துக் - கண்ணெகிழ்ந்து**
**நீங்கல் அரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கே**
**ஓங்கியதோர் சோலை யுளது"**

**விளக்கம்:**

உள்ளத்தின் கண்ணே உண்டாகிய குணமுடைத்தாய்ப், பலர்க்கும் ஏற்றமுற உதவி செய்து தண்ணளியுடைத் தாகிய விரிந்த முகத்தையும், கண்ணோட்டத்தையும் உடைத்தாய்ப் பிரிதற்கு அரிய சாயலோடு கூடி நிற்பதென ஒரு வள்ளல் மேலும், நடுவில் உண்டாகிய நீரையுடைத்தாய் மாறாது பல வளங்களைக் கொடுத்துத் தட்பமுடைய வண்டுகளைத் தாங்கிய மலர்களைத் தோற்றத்திலேயுடைத்தாய்த் தேனொழுகி விட்டும் போதற்கரிய நிழலுடைத்தாய் ஓங்கி நிற்பதென்று சோலை மேலும் செலுத்துக.

### 3. அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல்

அடைமொழிகள் விரவிவந்து பொருள் வேறுபட மொழிதல் இதுவாகும்.

**"தண்ணளிசேர்ந் தின்சொன் மருவும் தகைமைத்தாய்**
**எண்ணிய வெப்பொருளும் எந்நாளும் - மண்ணுலகில்**
**வந்து நமக்களித்து வாழு முகிலொன்று**
**தந்ததான் முன்னைத் தவம்"**

**விளக்கம்:**

குளிர்ந்த கருணையையும் இன்சொல்லையும் உடைத்தாய் எல்லாரும் விரும்புகின்ற எல்லாப் பொருளையும் காலம் வரையறுக்காது மண்ணுலகிலே பிறந்த எம்போல் உயிர்க்கு அளித்து வாழும் ஒன்று ஓர் வள்ளல் மேலும், உலகத்தார்க்குக் குளிர்ச்சியோடு கூடக் கொடுக்கின்ற கொடை சேர்ந்து நல்ல புகழ் மருவி, எண்ணுகின்ற எல்லாப் பொருளையும், எக்காலமும் உலகிற்குச் சேர்ந்து கொடுத்து வாழும் என மேகத்தின் மேலும் செலுத்துக.

## 4. அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல்

அடைமொழிகளை மாறுபடக் கொண்டு பொருளை வேறுபடக் கூறல் இதுவாகும்.

**"கடைகொல் உலகியற்கை காலத்தின் தீங்கால்**
**அடைய வறிதாயிற் றன்றே – அடைவோர்க்கு**
**அருமை யுடைத்தன்றி யம்தேன் சுவைத்தாயக்**
**கருமை விரவாக் கடல்"**

**விளக்கம்:**

மிகவும் எளிமையுடைத்துப் போலும் உயர்ந்தோர் தொழில், காலவியற்கையாலே இன்மையாற் சென்று இரப்பவும் வறுமையுற்றது! சேர்வோர்க்கு அருமையில்லாமல் தேன்போலும் ஒலியுமுடைத்தாய் வெகுளியில்லாக் கடல்.

## 11. அதிசயவணி

**"மனப்படும் ஒரு பொருள் வனப்புவந்த துரைப்புழி**
**உலகுவரம் பிறவா நிலைமைத் தாகி**
**ஆன்றோர் வியப்பத் தோன்றுவ ததிசயம்"**

**விளக்கம்:**

புலவன், தான் எண்ணிய பொருளினது அடிகை விரும்பிச் சொல்லுங்கால், உலகியலைக் கடவாத தன்மைக்தாகி உயர்ந்தோர் வியப்புமாறு சொல்லுவது அதிசயம் என்னும் அணியாம்.

**"அதுவே**
**பொருள்குணம் தொழிலையம் துணிவே திரிபெனத்**
**தெருளுறத் தோன்று நிலைமைய தென்ப"**

**விளக்கம்:**

மேலே கூறப்பட்ட அவ்வதிசயவணி பொருளதிசயம், குணவதிசயம், தொழிலதிசயம், துணிவதிசயம், ஐயவதிசயம், திரிபதிசயம் என ஆறு வகையாகும்.

### 1. பொருளதிசயம்

கூறப்படும் பொருள் வியப்பிற்குரியனவாக இருத்தல் பொருள் அதிசயம் ஆகும்.

**"பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும்**
**அண்ட முகடு நெருப்பேறாது – ஒண்தளிர்க்கை**
**வல்லி தழுவக் குழைந்த வடமேரு**
**வில்லி நுதல்மேல் விழி"**

**விளக்கம்:**

ஒளியுடைய தளிர்க்கைக் கொடியாகிய மலை மகள் தழுவியதால் குழைந்த வடமேரு மலையாகிய வில்லினையும், மேல்நோக்கிய நெற்றிக் கண்ணினையும் உடைய பரமசிவன் முற்காலத்துத் திாபுரந்தைச் சிரித்து எரித்த தீயானது விரைந்து போதலால், இக்காலத்தும் அண்டத்தின் உச்சியில் நெப்பு(இடி) ஆறாது.

### 2. குணவதிசயம்

காணப்படும் குணம் வியப்பிற்குரியதாக விருத்தல் குணவதிசயம் ஆகும்.

**"மாலை நிலவொளிப்ப மாதரிழை புனைந்த**
**நீல மணிகள் நிழலுமிழ மேல்விரும்பிச்**
**செல்லும் இவள்குறித்த செல்வன்பாற் சேர்தற்கு**
**வல்லிருளா கின்ற மறுகு"**

**விளக்கம்:**

மாலைப்பொழுதில் தோன்றிய நிலவானது மறைய, விரும்பினாற் பூண்ட அணிகளிலுள்ள நீலமணிகள் ஒளிமைக் கக்க, இவள் காதலொடு விரும்பிச் செல்லும்படி எண்ணப்பட்ட தலைவனிடத்திற் போதற்குத் தெருக்கள் செறிந்த இருளாகின்றன.

### 3. தொழிலதிசயம்

தொழில் வியப்புறுமாறு அமைத்து கிடத்தல் தொழிலதிசயம் ஆகும்.

**“ஆளும் பரியும் கரியும் சொரிகுருதி**
**தோளும் தலையும் சுழித்தெறிந்து – நீள்குடையும்**
**வள்வார் முரகு மறிதிரைமேற் கொண்டொழுக**
**வெள்வாள் உறைகழித்தான் வேந்து.**

**விளக்கம்:**

வீரர்களும், குதிரைகளும், யானைகளும் சொரிகின்ற இரத்த வெள்ளமானது, தோள்களையும், தலைகளையும் சுழித்து வீசி, நீண்ட குடைகளையும் வாரால் இழுத்துக் கட்டப்பட்ட பேரிகைகளையும் மடங்குகின்ற அலைகளையுடைய கடலின்மேல் அடித்துக் கொண்டு ஓடும்படி அரசன் வெண்மையாகிய வாளை உறையிலிருந்து எடுத்தான்.

## 4. ஐயவதிசயம்

ஐயப்பாடு தோன்றுங்கால் வியப்புடன் எண்ணுமாறு அமைந்து கிடத்தல் ஐயவதிசயம் ஆகும்.

**“உள்ளம் புகுந்தே யுலாவும் ஒருகாலென்**
**உள்ளம் முழுதும் உடன்பருகும் - ஒள்ளிழைநின்**
**கள்ளம் பெருகும் விழிபெரிய வோகவல்வேன்**
**உள்ளம் பெரிதோ வுரை”**

**விளக்கம்:**

ஒட்பம் பொருந்திய அணிகளையுடையாய்! நினது கள்ளமிக்க விழிகளானவை எனது உள்ளத்துப் புகுந்து உலாவுதலால் சிறிதாய்த் தோன்றின. அவை புகுந்து என்னுள்ளம் முழுதும் தமதுள்ளே அடக்கினமையின் அவ்வுள்ளம் சிறிதாய்த் தோன்றிற்று. இவற்றுள் விழிபெரியவோ? உள்ளம் பெரிதோ? சொல்வாயாக.

## 5. துணிவதிசயம்

துணியுங்கால் அதியமாகக் காட்டித் துணியுமாறு அமைந்து கிடத்தல் துணிவதிசயமாகும்.

**“பொங்கிச் செறிந்து புடைதிரண்டு மீதிரண்டு**
**செங்கலசக் கொங்கை திகழுமால் - எங்கோன்**
**தில்லையே யன்னார் இவரல்குல் தேரின்மேல்**
**இல்லையோ அண்டோ இடை!”**

**விளக்கம்:**

வளர்ந்து நெருங்கி அடிப்பரப்புமிக்குத் திரண்டு மேலே இரண்டு சிவந்த குடம் போன்ற முலைகல் விளங்கின. ஆதலால் எம் தலைவனாகிய சிவபெருமானுடைய தில்லைப் பதியை ஒத்த இவருடைய அல்குலாகிய தேரின் மேல் இடையில்லையோ? உண்டு.

இல்லையோ என்பதன் ஓகாரம் எதிர்மறைப் பொருளது. உண்டோ என்பதின் ஓகாரம் அசைநிலை.

## 6. திரிபதிசயம்

ஒன்றனை வேறொன்றாகத் துணியும் வழி அதிசயம் தோன்றுமாறு கூறுதல் திரிபதிசயம் ஆகும். இதனை “மயக்கவணி” என்றும் கூறுவர்.

**“திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்**
**பைங்கிள்ளை பாலென்று வாய்மடுக்கும் - அங்கயலே**
**காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரால்**
**ஏந்திழையார் பூந்துகிலா மென்று!”**

**விளக்கம்:**

நிலாமுற்றத்திருந்த வெள்ளிக்கிண்ணத்து உள்ள நிலவைப் பசுங்கிளிகள் பாலென்று கருதி வாய்மடுக்கும். அதுவேயன்றி, அங்கு ஓர் புறத்துந் தம் கணவரைப் புணர்ந்து நீங்கினாராகிய மகளிர் தாம் நீக்கிய துகிலெனக் கருதி அந்நிலவிலே கையை நீட்டுவார்.

## 12. தற்குறிப்பேற்றவணி

**“பெயர்பொரு ளல்பொரு ளெனவிரு பொருளினும்**
**இறல்பின் விளைதிற னன்றி யயலொன்று நான்குறித் தேற்றுதல் தற்குறிப்பேற்றம்”**

**விளக்கம்:**

புடை பெயர்ச்சியுடைய பொருளும், புடை பெயர்ச்சி, இல்லாப் பொருளும் என்னும் இரண்டு பொருளிடத்தும் இயல்பாக நிகழும் தன்மையன்றிப் புலவன் தான் எண்ணிய வேறொன்றினை அவற்றின் கண் ஏற்றிச் சொல்வது தற்குறிப்பேற்றமென்னும் அணியாம்.

### 1. பெயர் பொருள் தற்குறிப்பேற்றம்

இயக்கமுடைய பொருளின் மீதும் புலவன் தான் கருதிய கருத்தினை ஏற்றிக் கூறுதல் இதுவாகும்.

**“மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்**
**வேண்குடையைத் தேய்த்த வெகுளியால் - விண்படர்ந்து**
**பாயுங்கொ லென்று பனிமதியம் போல்தூஉம்**
**தேயும் தெளிவிசும்பில் நின்று”**

**விளக்கம்:**

நிலவுகினைச் சுமந்த தோள் வலியுடைய சோழனுடைய மதயானையானது மாறுபட்ட மன்னர்களுடைய வெண்கொற்றக் குடையைச் சீறிச் சிதைத்த வெகுளியாலே நம் மேலும் வந்து பாயுமோ வென்று குளிர்ச்சியுடைய விண்ணிலே நிறை மதியம் எனப்படுவதும் தேயாநிற்கும், தெளிவுடைய விசும்பின்கண் நின்று.

## 2. பெயராத பொருள் தற்குறிப்பேற்றம்

இயக்கமில்லாத பொருளைப் பற்றிக் கூறுங்காலும் புலவன் தான் கருதியவற்றை ஏற்றிக் கூறுதல்

இது.

**“வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி**
**வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத் - தானுடைய**
**தாதுமே தக்க மதுவும் தடஞ்சினையாற்**
**போதும் தேந்தும் பொழில்”**

**விளக்கம்:**

முதுவேனிற் காலத்துச் சூரியன் வெப்பத்திற்கு ஆற்றாது வாடிய தமது மெய் வறுமை கண்டு இரக்கமுற்று, வானின்கண் நின்று மழை வளத்தைப் பொழிந்து தமது வாட்டம் நீங்கின முகிலுக்குப் பொழில்கள் தங்களிடத்து உண்டாகிய மேன்மை பொருந்தியதோடு கூடிய மலர்களையும், தஙக்களிடத்து உள்ள தேனையம், தமது பெரிய கிளைகளாகிய கைகளாலே மேல் நோக்குத் தாங்கி நிற்கும்.

**“அன்ன போலெனும அவைமுத லாகிய**
**சொல்நிலை விளங்கும் தோற்றமும் உடைத்தே”**

**விளக்கம்:**

“அன்ன”, “போல” என்பவை முதலாகிய உவமை உருபுகள் சில புணர்ந்து விளங்கும் தன்மையுமுடைத்தாம், அத்தற்குற்ப் பேற்றம் என்னும் அணி.

### 13. ஏதுவணி

**“யாதன் திறத்தினு மதனின்இது விளைந்தென்று**
**ஏதுவிதந் துரைப்ப தேது வதுதான்**
**குாரக ஞாபக மெனவிரு திறப்படும்”**

**விளக்கம்:**

யாதாயினும் ஒரு பொருள் கூறுபாட்டிடத்து இதனால் இது நிகழ்ந்ததென்று காரணத்தைச் சிறப்பாக எடுத்துச் சொல்லுவது ஏதுவென்னும் அணியாம், அது காரகவேது என்றும், ஞாபக வேது என்றும் இரண்டு கூறப்படும்.

காரணத்துடன் காரியத்தையும் சேர்த்துச் சொல்லுவது ஏதுவணி என்று கூறுவர்.

### (I) காரக வேது

**“முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்**
**ஏற்பது நீக்கமும் எனவினவ காரகம்”**

**விளக்கம்:**

கருத்தா, பொருள், காரியம், கருவி, ஏற்பது, நீக்கம் எனச் சொல்லப்பட்ட இவையாறும் காரணமாகத் தோன்றுவது காரக ஏதுவாம்.

### 1. கருத்தா காரகவேது

கருத்தாவின் செயலினை ஏதுவாகக் காட்டல் இது.

**“எல்லைநீர் வையகத்து எண்ணிறத்த எவ்வுயிர்க்கும்**
**சொல்லரிய பேரின்பம் தோற்றியதால் - முல்லைசேர்**
**தாதலைத்து வன்கொன்றைத் தாரவைத்து வண்டாக்கப்**
**பூதலைத்து வந்த புயல்”**

**விளக்கம்:**

முல்லைப் பூவிலுள்ள மகரந்தங்களை அசைத்து, வளப்பம் பொருந்திய கொன்றை மலர்களையும் அசைத்து, வண்டுகள் இசையைச் செய்யும்படி பூமியினிடத்து வந்த காற்றானது, கடலால் சூழப்பட்ட அப்புவியிலுள்ள அளவில்லாத எல்லா உயிர்கட்கும் அளவிட்டுச் சொல்லுதற்கரிய பெரிய இன்பத்தைக் கொடுத்தது.

## 2. பொருட்காரக வேது

பொருட்களின் செயலினை ஏதுவாக்கிக் காட்டல் இது.

**“கனிகொள் பொழிலருவி கைகலந்து சந்தின்**
**பனிவிரவிப் பாற்கதிர்கள் தோய்ந்து – தனியிருந்தோர்**
**சிந்தை யுடனே யுயிருணக்கும் தென்மலயம்**
**தந்த தமிழ்மா ருதம்”**

**விளக்கம்:**

தென் திசையிலுள்ள பொதிகை மலையினால் தரப்பெற்ற தமிழோடு கூடிய தென்றற் காற்றானது சோலைகளால் உதிர்க்கப் பட்ட கனிகளோடு கலந்து பாய்கின்ற அருவியினடத்தே கலந்து, சந்தனத்தின் குளிர்ச்சியுடனே பொருந்தி பாவன்ன நிலவுக் கதிர்குளிற் படிந்து, தன்னியற்கை ஒழிந்து, தலைவரைப் பிரிந்து தனியாக இருந்தோரின் உள்ளத்துடனே உயிரையும் வாட்டியது.

## 3. கருமகாரக வேது

வினையின் செயற்பாட்டினை ஏதுவாக்கிக் காட்டுதல் இது.

**“தலையின் அலைகடலின் வாளரவின் வெய்ய**
**தலையிற் பயின்ற தவத்தால் - தலைமைசேர்**
**அம்மாதர் புல்லு மபயன் புயம்புணர**
**எம்மா தவம்புரிந்தோம் யாம்”**

**விளக்கம்:**

விந்திய மலையிலும், அலையுடைய கடலிலும் கொடுமை மிக்க அரவின் வெய்ய தலையிலும் நின்று செய்த தவத்தினாலே தலைமை பெற்ற வெற்றித் திரு பொருட் செல்வி, பூ மடந்தை ஆகிய அந்த மகளிர்கள் மூவராலும் தழுவப்பட்ட சோழனுடைய தோளைத் தழுவதற்கு யாம் எவ்வகைச் சிறந்த தவம் ஆற்றினோம்.

வெற்றிக்குத் தலைவியாகிய கொற்றவை, விந்திய மலையில் வாழ்பவள். இலக்குமி பாற்கடலில் வாழ்பவள், பூமடந்தை ஆதிசேடன் தலையின் மேற்றங்குபவள்.

### 4. கருவிகாரக வேது

துணைக் காரணத்தின் செயலினை ஏதுவாக்கிக் கூறுதல் இது.

**"கரடத்தான் மாரியும் கண்ணால் வெயிலும்**
**நிரைவயிரக் கோட்டால் நிலவும் - சொரியுமால்**
**நீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து**
**வாளால் கவர்ந்த வளம்"**

**விளக்கம்:**

மதநீர் ஒழுக்கினாலே மனடியையும், கண்ணின் கோபத்தாலே வெயிலையும், நிரையான வயிரப் பூனையுடைய தந்தங்களின் வெண்மையால் நிலவையும் சொரிந்தது. நீண்ட அத்திப்பூ மாலையையுடைய ஒப்பற்றவனாகிய சோழன், தன் பகைவர் வாழும் கலிங்க நாட்டிற் சென்று வாளாண்மையாலே கைப்பற்றிக் கொணர்ந்த செல்வமாகிய யானைத்திரள்.

### (II) ஞாபக வேது

"அவையல பிறவின் அறிவது ஞாபகம்"

மேலே கூறப்பட்ட வரையறுக்கப்பட்ட காரணமின்றிப் பிற காரணங்களால் உய்த்துணரத் தோன்றுவது
ஞாபக வேதுவாம்.

**"காதலன்மே லூடல் கரையிறத்தல் காட்டுமால்**
**மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப – மீது**
**மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட**
**கருங்குவளை சேர்ந்த கருத்து"**

**விளக்கம்:**

பெண்களின் நெற்றி வியர்க்கவும், வாய் துடிக்கவும், பக்கங்கள் வளையப் பெற்ற புருவங்களாகிய விற்கள் மேலே நெறித்தல் செய்யவும், வாட்படையானது தோற்றுக் குறுகிப் போகும்படி கூர்மைபெற்று, நீண்ட கருங்குவளை மலர்போன்ற கண்கள் சிவந்ததன் குறிப்பு, அவர்கள் தம்முடைய தலைவன் மீது கொண்ட பிணக்கு அளவு கடத்தலைத் தெரிவிக்கும்.

## 14. நுட்பவணி

**“தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினும்**
**அரிதுணர் வினைத்திறம் நுட்பமாகும்”**

**விளக்கம்:**

அறிந்து கொண்டு வேறு வகையாகக் கூறாது, குறிப்பினாலாவது தொழிலினாலாவது அரிதாக நோக்கி உணருந் தன்மையை உடையது நுட்பம் என்னும் அலங்காரமாகும்.

### 1. குறிப்பு நுட்பம்

**“காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்**
**பேறையர் ஆயம் பிரியாத – மாதர்**
**படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்**
**குடதிசையை நோக்குங் குறிப்பு”**

**விளக்கம்:**

பேதைமை தாங்கிய மாதர் கூட்டத்தைப் பிரியாத தலைவியானவள் உலகத்தில் பரவுகின்ற இருளைப் போக்கும் கதிரவனைப் பார்த்துப் பிறகு மேற்குத் திக்கைப் பார்க்குங் குறிப்பானது தலைவனுடைய மென்மையான உயிருக்குப் பாதுகாவலைச் செய்தது.

### 2. தொழில்நுட்பம்

**“பாடல் பயிலும் பணிமொழி தன்பணைத்தோள்**
**கூடல் அவாவால் குறிப்புணர்த்தும் - ஆடவற்கு**
**மேன்றீந் தொடையாழின் மெல்லவே தைவந்தாள்**
**இன்றீங் குறிஞ்சி யிசை”**

**விளக்கம்:**

பாடுந்தொழிலைச் செய்கின்ற குறிர்ந்த மொழிகளையுடையவள் தன்னுடைய பெருத்த தோள்களினாலே தலைவனைத் தழுவ வேண்டும் என்னும் அவாவால் தலைவனுக்குத் தன்னுடைய உள்ளக் கருத்தை உணர்த்தா நின்றாள். இனிய ஓசையினையுடைய குறிஞ்சியாகிய பண்ணை மெல்லிய நல்ல நரம்பை உடைய யாழிலே முறையாகப் பாடினாள்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கலிப்பாஎன்றால் என்ன? | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K2 | CO2 | PO4 |
| 2 | கலிப்பாவின் இனங்களைவகைப்படுத்து. | K4 | CO3 | PO5 |
| 3 | கலித்தாழிசைஎன்றால் என்ன? | K1 | CO4 | PO1 |
| 4 | வஞ்சிப்பாவின் பொது இலக்கணம் கூறு. | K5 | CO5 | PO2 |
| 5 | மருட்பாவிளக்குக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | செவியறிவுறூஉ மருட்பாமற்றும் வாயுறைவாழ்த்துமருட்பாகுறித்துவிளக்கியுரைக்க. | K1 | CO4 | PO4 |
| 2 | வஞ்சிப்பாவின் இனங்களைவிவரி. | K4 | CO2 | PO6 |
| 3 | கொச்சகக் கலிப்பாவின் வகைகள் யாவை? | K3 | CO1 | PO5 |
| 4 | கலிப்பாவின் இனங்கள் குறித்துவிவரிக்க. | K2 | CO5 | PO6 |
| 5 | கலிப்பாவின் உறுப்புகளைஎடுத்துரைக்க | K4 | CO3 | PO3 |

## அலகு – 4

### 15. இலேசவணி

**“குறிப்பு வெளிப்படுதக்குஞ் சத்துவம் பிறிதின்**
**மறித்துரை யாடல் இலேச மாகும்”**

**விளக்கம்:**

எண்ணியதனை வெளிப்படுத்தும் நன்மையாகிய குணங்களை வேறொன்றால் நிகழ்ந்தனவாக மறைத்துக் கூறுவது இலேசம் என்னும் அணியாகும்.

**“கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசேர்**
**மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று – சொல்லுவரால்**
**பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள் சேர்ந்**
**தெங்கண் கலுழ்ந்தனவால் என்று”**

**விளக்கம்:**

மலைபோன்ற பெரிய தோள்களையுடைய சோழ மன்னன் ஏறிய குதிரையைத் தொழுது நீரொழுகுங் கண்களையுடைய மெல்லிய நடையை உடைய பெண்கள் எம்முடைய கண்களில் நீர் ஒழுகுவதற்குக் காரணம் சினத்தையுடைய படையானது பரவி வருவதலால் விண்ணில் எழுந்த பூந்துகள் எம்முடைய கண்களிலே சேர்ந்த படியினாலேதான் என்று கூறுவர்.

## இதுவுமது

**“புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்**
**பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தலும்**
**அவையும் அன்னவென் றறைகுநர் உளரே”**

**விளக்கம்:**

ஒன்றைப் புகழ்வதைப் போலப் பழித்து உரைத்தலும் பழித்தலைப் போலப் புகழ்ந்து உரைத்தலும் ஆகிய இவைகளும் முன் கூறிய இலேச அணியின் கூறாகும் என்று சொல்லுகின்றவர்களும் இருக்கின்றனர்.

### 1. புகழ்வது போலப் பழித்தல்

**“மேய கலவி விளைபொழுது நம்மெல்லென**
**சாயல் தளராமல் தாங்குமால் - சேயிழாய்!**
**போர்வேட்ட மேன்மைப் புகழாளன் யாம் விரும்பித்**
**தார்வேட்ட தோள்விடலை தான்”**

**விளக்கம்:**

தோழியே! எப்பொழுதும் போர்த் தொழிலையே விரும்பிய மேன்மையான புகழையுடையவனும் நம்மால் விரும்பி மாலையணியப்பட்ட தோள்களை உடையவனுமாகிய தலைவன், பொருந்திய கலவி நிகழும் பொழுது நம்முடைய மென்மை தளராதவாறு பார்த்துக் கொள்ளுவான்.

### 2. பழிப்பது போலப் புகழ்தல்

**"ஆடன் மயிலியலி அன்பன் அணியாகம்**
**கூடுங்கால் மெல்லென் குறிப்பளியான் - ஊடல்**
**இளிவந்த செய்கை இரவாளன் யார்க்கும்**
**விளிவந்த வேட்கை யிலன்"**

**விளக்கம்:**

ஆடுகின்ற மயில்போலும் சாயலையுடையவளே! நம்முடைய காதலனது அழகிய தோளை யாம் கூடும்பொழுது நம்முடைய இனிய நலத்தைப் பாராட்ட அறியானாகையாலும் ஊடற்கண் தகுதியல்லாதவைகளைச் செய்து இரக்கின்ற இரவாளனாகையாலும் எவர்க்கும் வெறுக்கத்தக்க ஆசையுடையவனல்ல வாகையாலும் இகழ்தற்கு ஏதுவாயினான்.

## 16. நிரனிறையணி

நிரல்நிறுத் தயற்றுதல் நிரல்நிறை அணியே.

**விளக்கம்:**

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி நேரே பொருள் கொள்வது நிரல்நிறை என்னும் அணியாகும்.

### 1. வரிசையாக நிறுத்தி நேராகப் பொருள் கொள்வது:

**"காரிகை மென்மொழியால் நோக்கால் கதிர் முலையால்**
**வார்புருவத் தாலிடையால் வாய்ந்தளிரால் - நேர் தொலைந்த**
**கொல்லி வடிநெடுவேல் கோங்கரும்பு விற்கரும்பு**
**வல்லி கவிர்மென் மலர்"**

**விளக்கம்:**

அழகமைந்த மாதினுடைய மென்மையான சொல்லாலும், பார்வையாலும், ஒளி பொருந்திய கொங்கைகளாலும், நீண்ட புருவத்தினாலும் இடையினாலும், தளிர் போன்ற மெல்லிய வாயாலும் கொல்லியென்கின்ற இனிமையான பண்ணும், கூர்மை தங்கிய நீண்ட வேலும், கோங்கின் அரும்பும், காமனுடைய வில்லாகிய கரும்பும், பூங்கொடியும் மென்மையுள்ள முருக்க மலரும் அழகை அழந்தன.

சொல், பார்வை, கொங்கை, புருவம், இடை, வாய்த்தளிர் ஆகியவைகளை ஒருவரிசையாகவும், பண், வேல், கோங்கரும்பு, வில், கொடி, முருக்க மலர் ஆகியவைகளை ஒரு வரிசையாகவும் கூறியமை காண்க.

**2. வரிசையாக நிறுத்தி மொழிமாற்றிப் பொருள் கொள்வது:**

**"ஆடவர்கள் எவ்வா றகன்றொழிவார் வெ.·.காவும்**
**பாடகமும் ஊரகமும் பஞ்சரமா – நீடியமால்**
**நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ**
**மன்றார் மதிற்கச்சி மாண்பு"**

**விளக்கம்:**

நீண்ட திருக்கோலத்தையுடைய திருமால் வெ.·.காவையும், பாடகத்தையும், ஊரகத்தையும் தனக்கு இடகங்களாகக் கொண்டு அவற்றில் முறையே படுத்தான் இருந்தான் நின்றான். இதுவன்றோ பல அவைகள் பொருந்தியதும் மதிலாற் சூடிப் பெற்றதுமாகிய காஞ்சிப் பதியின் பெருமை, இத்தகைய பெருமை வாய்ந்த அப்பதியை மனிதர்கள் எவ்வாறு விட்டு நீங்குவார்கள்?

## 17. ஆர்வமொழியணி

**"ஆர்வமொழி மிகுப்ப தார்வ மொழியே"**

**விளக்கம்:**

உள்ளே நிகழ்ந்த ஆர்வம் பற்றி நிகழும் மொழி மிகுதியாகத் தோன்றச் சொல்வது ஆர்வமொழி என்னும் அணியாம்.

**"சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள்**
**புல்ல விருதோள் புடைபெயரா – மெல்ல**
**நினைவோம் எனில்நெடுஞ் சிடம்போதா தெம்பல்**
**துனைதாராய் வந்ததற்கு மாறு"**

**விளக்கம்:**

நினக்கு முன்னே நின்று மறுமொழி கூறுதற்கு முயல்வேமாயின் எங்களுடைய மொழியானது தடுமாறிச் சோர்வு படுகின்றது. உன்னுடைய இரண்டு தோள்களையுந் தழுவ முயல்வேமாயின் எங்களுடைய இரண்டு தோள்களும் இடமுண்டாக வளர்வனவல்ல. மெல்ல நின்னுடைய புகழை நினைப்போம் என்றால் எங்களுடைய உள்ளம் இடம் போதாது. அழகு செய்யப்பட்ட மாலையை உடையவனே! நீ எம்பால் வந்ததற்கு யாது கைம்மாறு செய்வேம்?

## 18. சுவையணி

**"உண்ணிதழ் தன்மை புறத்துத் தோன்ற**
**எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே"**

**விளக்கம்:**

உள்ளே நிகழுந் தன்மையானது வெளியிலே நன்றாக விளங்க எட்டுவகையான மெய்ப்பாட்டினாலும் நடப்பது சுவையென்னும் அணியாகும்.

**"அவைதாம்**
**வீரம் அச்சம் அழிப்பொடு வியப்பே**
**காமம் அவலம் உருத்திர நகையே"**

**விளக்கம்:**

எட்டு வகையான மெய்ப்பாடுகள் வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை என்பனவாம்.

### 1. வீரச் சுவை

**"சேர்ந்த புறவின் இறைதன் திருமேனி**
**ஈர்ந்திட் டுயர்துலைதான் ஏறினான் - நேர்ந்த**
**கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கண்**
**படைவீர மோசென்னி பண்பு"**

**விளக்கம்:**

தன்னிடத்தே அடைக்கலம் புகுந்த புறவினது எடைக்காகத் தன் அழகிய உடம்பில் உள்ள தசையை அறுத்து வைத்தும் எடை சரியாகாமற்போகவே தானும் உயர்ந்த துலையில் ஏறினான். இவ்வாறு ஏறிய இத்தன்மை தன்னுடைய கொடையின் வீரமோ மெய்யொழுக்கால் குறையாத

வலிமையை உடைய படையின் வீரமோ? இவ்விரண்டும் அன்று. இது சோழனுடைய தன்மையேயாகும்.

## 2. அச்சச் சுவை

**"கைநெரித்து வெய்கதுயிர்ப்பக் கால்தளர்ந்து மெய்பனிப்ப**
**ஐமயரிக்கண் நீர்த்ததும்ப வாய்புலர்ந்தாள் - தையில்**
**சினவேல் விடலையால் கையிழந்த செங்கண்**
**புனவேழம் மேல்வந்த போது"**

**விளக்கம்:**

சினம் பொருந்தியவனும் வேற்படை தாங்கியவனுமான வீரனால் தும்பிக்கையை இழந்த சிவந்த கண்களையுடைய காட்டு யானை தன் முன்னே வந்த பொழுது ஒரு பெண், தன்னுடைய கைகளை நெரிதுக் கொண்டு பெருமூச்சுண்டாகவும், கால்தளரவும், உடல் நடுங்கவும், மையெழுதப்பெற்ற செவ்வரிகள் பொருந்திய கண்களில் நீர் ததும்பவும் வாயுலர்ந்து போனாள்.

## 3. இழிப்பு சுவை

**"உடைதலையும் மூளையும் ஊன்தடியும் என்பும்**
**குடருங் கொழுங்குருதி ஈர்ப்ப – மிடையே**
**பெருநடஞ் செய்பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி**
**கருநடரைச் சீறுங் களம்"**

**விளக்கம்:**

வெற்றியமைந்த போரினையுடைய சோழன் கர்நாடக தேசத்தரசர்களைச் சினந்து தாக்கிய போர்க் களமானது உடைந்து போன தலைகளையும், மூளைகளையும், நிணத்தையும், தசையையும், எலும்பையும், குடலையும் மிகுந்து குருதிப் பெருக்கானது இழுக்க மிகுதியான பேய்கள் மிகுதியாகக் கூத்தாடுந் தன்மையை உடையது.

## 4. வியப்புச் சுவை

**"முத்தரும்பிச் செம்பொன் முறிததைந்து பைந்துகிரின்**
**தொத்தலர்ந்து பல்கலனும் சூழ்ந்தொளிரும் - கொத்தினதாம்**
**பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்**
**தன்னேர் பொழியுந் தரு"**

**விளக்கம்:**

பொன்னையும் அழுகிய மணிகளையும் இருபக்கங்களிலும் அலைகளால் ஒதுக்குகின்ற அழகிய காவிரி நாட்டை உடையவனுக்கு, நேராக வளத்தினைச் சொரியுங் கற்பகத்தருவானது, முத்தாகிய அரும்பையரும்பிச் சிவந்த பொன்னாகிய தளிரினாலே நெருங்கிப், பச்சைப் பவளமாகிய கொத்துக்களைத் தோற்றுவித்துப் பலவகையாகிய அணிகலன்களாலுஞ் சூழப் பெற்று விளங்குங் கிளைகளை உடையதாக இருக்கும்.

### 5. காமச் சுவை

**“திங்கள் நுதல்வியர்க்கும் வாய்துடிக்கும் கண்சிவக்கும்**
**அங்கைத் தளிர்நடுங்கும் சொல்லசையும் - கொங்கை**
**பொருகாலு மூடிப் புடைபெயருங் காலும்**
**இருகாலும் ஒக்கும் இவர்க்கு”**

**விளக்கம்:**

தனங்கள் தன்மீது அழுந்துமாறு இவர் என்னைத் தழுவுங் காலத்திலும், என்பால் ஊடல்கொண்டு பக்கத்திலே நீங்கிச் செல்லுகிற காலத்திலும் இவர்க்கும் மூன்றாம் பிறைத் திங்களைப் போன்ற நெற்றிவியர்க்கும், வாய் துடிக்கும், கண் சிவக்கும், அழகிய கைகள் நடுங்கும், சொல் குளறும், தழுவுங் காலத்திலும் பிரியுங் காலத்திலும் இச்செயல்கள் இவர்க்கு ஒரு தன்மையனவாகவே நிகழும்.

### 6. அவலச்சுவை

**“கழல்சேர்ந்த தாள்விடலை காலிமெய் தண்டும்**
**அழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தாள் - குழல்சேர்ந்த**
**தாமம் தரியா தசையுந் தளிர்மேனி**
**ஈமம் தரிக்குமோ என்று”**

**விளக்கம்:**

வீரக்கழலையணியந்த கால்களையுடைய வீரனானவன், தன்னுடைய காலியின் உடலைத் தீண்டிய தீயைச் சேர்ந்து, கூந்தலில் அணிந்த மாலையைச் சுமக்க முடியாமல் அசைகின்ற தளிர்போன்ற உடலானது உளகடுக்கின் தீயைப் பொறுக்க வல்லதோ என்று தன்னுடைய உள்ளம் வருந்தினான்.

### 7. உருத்திரச் சுவை

**“கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா**
**மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான் - வெய்யபோர்த்**
**தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று**
**போர்வேந்தன் தூதிசைத்த போது”**

**விளக்கம்:**

கொடிய போரிலே வெற்றிமாலையை அணிந்த தோள்களையுடைய அரசன் மகளைத் திருமணஞ் செய்து தருக என்று போர் செய்யும் அரசன் தூதனுப்பி சொன்ன பொழுது, கைகளைப் பிசைந்து, வாயை மடித்துக் கண் சிவந்து, வெப்பமாகப் பெருமூச்செறிந்து உடல் நடுக்குற்று வியர்த்து சினங்கொண்டு போர்புரிய எழுந்தான்.

### 8. நகைச் சுவை

**“நாண்போலுந் தன்மனைக்குத் தான்சேரல் இந்நின்ற**
**பாண்போலும் வெவ்வழலிற் பாய்வதூஉம் - காண்தோழி**
**கைந்தலங் கண்ணாக் களவுகாண் பானொருவன்**
**பொய்த்தலைமுன் நீட்யற்றுப் போந்து”**

**விளக்கம்:**

தோழியே! நீ அறிவாயாக! தன்னுடைய இல்லத்திற்குத் தான் வருவதற்கும் நம்முடைய தலைமகனுக்கு வெட்கம் போலும். அவர் சுடுகின்ற தீயிற் குதிப்பதாகச் சொல்வதும் இப்பாணனுடைய சமயத்திற்கேற்ற கற்பனைப் பொருளேயாகும். கைகளையே கண்ணாகக் கொண்டு இருளிற் களவு செய்யுங் கள்ளன் களவு செய்யுமிடத்திற்குச் சென்று முன்னே பொய்த் தலையை நீட்டுகின்ற தன்மையைப் போன்றதாம்.

## 19. தன்மேம்பாட்டுரை

**“தான்றன் புகழ்வது தன்மேப் பாட்டுரை”**

ஒருவன் தன்னைத்தானே புகழ்வது தன் மேம்பாட்டுரை என்ற பெயரினையுடைய அணியாகும்.

**“எஞ்சினார் இல்லை எனக்கெதிரா இன்னுயிர் கொண்**
**டஞ்சினார் அஞ்சாது போயகல்க – வெஞ்சமத்துப்**
**பேரா தவராகத் தன்றிப் பிறர்முதுகில்**
**சுராஎன் கையிற் சரம்”**

**விளக்கம்:**

கொடிய போரில் எனக்கெதிராக வந்து போர் செய்து தமது இனிய உயிரைக் காப்பாற்றிக் கொண்டு பிழைத்து மிஞ்சியவர் ஒருவரும் இவர். போருக்கு அஞ்சியவர்கள் விலகிப் போவதற்குச் சிறிதும் அஞ்சாமல் விலகிப் போவார்களாக! ஏன்கையாற் செலுத்தப் பெறும் அம்புகள் புறங்கொடுத்து ஓடாதவர்களின் மார்பின் கண்ணே செருமேயல்லாமல் புறங் கொடுத்தோடுபவர்களின் முதுகின் அடையமாட்டா.

## 20. பரியாய அணி

**"கருதியது கிளவா தப்பொருள் தோன்றப்**
**பிறிதொன்று கிளப்பது பரியா யம்மே"**

**விளக்கம்:**

தான் எண்ணியதனைக் கூறாது அப்பொருள் தோன்றுமாறு வேறொன்றைக் கூறுவது பரியாயம் என்னும் அணியாகும்.

**"மின்னிகரா மாதே விரைச்சாந் துடன்புணர்ந்து**
**நின்னிகராம் மாதவிக்கண் நின்றருள்நீ – தன்னிகராம்**
**செந்தீ வரமலரும் செங்காந்தப் போதுடனே**
**இந்தி வரங்கொணர்வல் யான்"**

**விளக்கம்:**

மின்னாற்கொடியை ஒத்த பெண்ணே! வாசனையை உடையதாகிய சந்தன மரத்தோடு சேர்ந்து, உனக்கு ஒப்பாக நிற்கின்ற இக்குருக்கத்தியின் கீழே நிற்பாயாக! தனக்கு ஒப்பான சிவந்த தீயின் ஒளி தெரியுமாறு மலர்ந்த சிவந்த காந்தள் மலருடனே குவளை மலரை நினக்குப் பறித்துக் கொண்டு வருகிறேன்.

## 21. சமாகித அணி

**"முந்துதான் முயல்வுறு தொழிற்பயன் பிறிதொன்று**
**தந்ததா முடிப்பது சமாகித மாகும்"**

**விளக்கம்:**

முன்னே தன்னால் முயற்சி செய்யப்பட்ட தொழிலினது பயனானது அத்தொழிலால் அல்லாமல் வேறொன்றால் நிகழ்ந்ததாகக் கூறி முடிப்பது சமாகிதம் என்னும் அணியாகும்.

**"அருவியங் குன்றம் அரக்ன் பெயர்ப்ப**
**வெருவிய வெற்பரையன் பாவை – பெருமான்**
**அணியாகம் ஆரத் தழுவினாள் தான்முன்**
**தணியாத ஊடல் தணிந்து"**

**விளக்கம்:**

முன்பு தீராத ஊடலையுடையவளாயிருந்த மலையரசன் பெண்ணாகிய உமாதேவியானவள் அருவியினை உடையதும் அழகு பொருந்தியதுமான கையிலை மலையைப் பத்துத் தலைகளை உடையவனாகிய இராவணன் பெயர்த்தெடுக்க அதனால் அஞ்சியவளாய்ச் சிவபெருமானுடைய அழகிய மார்பகத்தை ஊடல் தணிந்து தானே தழுவிக் கொண்டாள்.

## 22. உதாத்தவணி

**"வியத்தகு செல்வமும் மேம்படும் உள்ளமும்**
**உயர்ச்சிபுனைந் துரைப்பது உதாத்த மாகும்"**

**விளக்கம்:**

வியக்கத்தக்க செல்வத்தினது உயர்ச்சியையும், மேம்பட்ட உள்ளத்தினது உயர்ச்சியையும் அழகு பொருந்தக் கூறுவது உதாத்தம் என்னும் அணியாகும்.

### 1. செல்வப் பெருமை

**"கன்றும் வயவேந்தர் செல்வம் பல்கவர்ந்தும்**
**என்றும் வறிஞர் இனங்கவர்ந்தும் - ஒன்றும்**
**அறிவரிதாய் நிற்கும் அளவினதால் அம்ம**
**செறிகதிர்வேற் சென்னி திரு"**

**விளக்கம்:**

சினக்கின்ற வெற்றியினையுடைய அரசர்களுடைய செல்வங்கள் பலவற்றையும் எப்பொழுதுங் கவர்ந்து கொண்டு வரலாலும், வறிஞர் கூட்டத்தால் தாம் வேண்டியவாள் எடுத்துக் கொள்ளப்

பெறுவதாலும் நிறைந்த ஒளியை உடைய வேற்படையைத் தாங்கிய சோடி மன்னனுடைய செல்வமானது சிறிதேனும் அளவறியப்படாததாக நிற்கும்.

### 2. உள்ளப் பெருமை

**"மண்ணகன்று தன்கிளையின் நீங்கி வனம்புகுந்து**
**பண்ணுவந் தவத்திசைந்த பார்த்தன்றான் - எண்ணிறந்த**
**மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந் தொலைந்தான்**
**கோதண்ட மேதுணையாகக் கொண்டு"**

**விளக்கம்:**

மண்ணரசாட்சியைக் கைவிட்டு, தன்னுடைய சுற்றத்தாரர்களையும் நீங்கிக் காட்டிற்குச் சென்று செய்யத் தொடங்கிய தவத்திலே பொருந்திய அருச்சுனனானவன், மேல் உலகத்தில் உள்ளவர்களாகிய தேவர்கட்கு அரசனான இந்திரன் நடுங்குமாறு வருகின்ற கொடியவர்களாகிய அசுரர்களின் குலங்கெடுமாறு தன்னுடைய வில்லே துணையாகக் கொண்டு அவர்களைத் தொலைத்தான்.

## 23. அவநுதி அணி

**"சிறப்பினும் பொருளினுங் குணத்திலும் உண்மை**
**மறுத்துப் பிறிதுரைப்ப தவநுதியாகும்"**

**விளக்கம்:**

சிறப்பு, பொருள், குணம் என்பவைகளின் தன்மையை மறுத்து வேறு கூறுவது அவநுதி என்னும் அணியாகும்.

### 1. சிறப்பு அவநுதி

**"நறைகமழ்தார் வேட்டார் நலனணியும் நாணும்**
**நிறையு நிலைதளரா நீர்மை – அறநெறிசூழ்**
**செங்கோல னல்லன் கொடுங்கோலன் தெல்படுபோர்**
**வெங்கோப மால்யானை வேந்து"**

**விளக்கம்:**

நறுமணத்தை மாலையை விரும்பிய பெண்களுடைய அழகும் அணியும் நாணும் நிறையும் நிலை தளராதபடி தாங்கும் அறநெறி பொருந்திய செங்கோலை உடையவனல்லன் கொடுங்கோன்மையை உடையவன், போர்க் களத்திலே பகைவரையழித்த கொடிய சினத்தையுடைய பெரிய யானைக்குரிய அரசன்.

### 2. பொருள் அவநுதி

**நிலனாம் விசும்போம் நிமிர்கால்நிர் தீயாம்**
**அயர்கதிராம் வான்மதியாம் அன்றி – மலர் கொன்றை**
**ஒண்ணுறுந் தாரான் ஒருவன் இயமானனுமாய்**
**எண்ணிறந்த எப்பொருளு மாம்''**

**விளக்கம்:**

மலர்ந்த கொன்றைப் பூவினாற் செய்த நறுமணத்தை உடைய ஒள்ளிய மாலையை அணிந்தனும் ஒப்பற்றவனுமாகிய, சிவபெருமான் நிலமும், விண்ணும், உயர்ந்த காற்றும், நீரும், தீயும் பரந்த ஒளியையுடைய கதிரவனும் வெள்ளிய திங்களுமாகிய ஏழாதலுமல்லாமல் ஆன்மாவுமாய் எண்ணற்ற எல்லாப் பொருள்களுமாவன்.

### 3. குண அவநுதி

**''மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கு மாரப்**
**பனித்தொடையால் பார்திபர்கோன் எங்கோன் - தனிக்கவிகை**
**தண்மை நிழற்றன்று தற்றொழுத பேதையர்க்கு**
**வெம்மை நிழற்றாய் மிகும்''**

**விளக்கம்:**

மனிதர்கள் நிலவுலகின் கண் இனிது உயிர் வாழ வேதாகம நெறியை வளர்க்கும் குளிந்த ஆத்தி மாலையை உடைய அரசர்க்குத் தலைவனாகிய எம் இறைவன் சோழராசனது தனிக்குடை தண்ணிய நிழலையுடையதன்று. அவனைக் கண்ட பெண்களுக்கு மிக வெய்ய தன்மையைச் செய்யா நிற்கும்.

இது பிறவணிகளோடு கூடி வரும்.

### 24. சிலேடையணி

**''ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்றி**

**தேரிதர வருவது சிலேடை யாகும்''**

**விளக்கம்:**

ஒரேவகையான அமைந்துள்ள தொடர்சொல் பலவகையான பொருள்களைத் தருமாறு அமைந்து நிற்பது சிலேடை என்னும் அணியாகும்.

**''அதுவே**
**செம்மொழி பிரிதொழி எனவிரு திறப்படும்''**

சிலேடை, செம்மொழிச் சிலேடை என்றும் பிரிமொழிச் சிலேடை என்றும் இருவகைப்படும்.

## 1. செம்மொழிச் சிலேடை

**''செங்கரங்க ளானிரவு நீக்குந் திறம்புரிந்து**
**பங்கய மாதர் நலம்பயிலப் - பொங்குதயத்**
**தோராழி வெய்யோன் உயர்ந்த நெறியொழுகும்**
**நீராழி நீணிலத்து மேல்''**

**விளக்கம்:**

சிவந்த கரங்களால் இருள்கடியுந் திறமை மிகுந்து தாமரை விரும்புஞ் சிறப்புடையதாக மேனோக்கிய தோற்றத்தை உடைய ஒரு காலூர்திக் கதிரவன் வானெறி ஒழுகுங் கடல் சூழ்ந்த புவிமீது எனவும்……சிவந்த கைகளால் உலகில் உள்ளவர்களுடைய வறுமையைப் போக்குந் தொழில் மிகுந்து திருமகள் செல்வம் பெருக மேம்படாநின்ற பொருள் உருவாயை உடையவனுமாய்த் தனிச் சக்கரத்தை உடையவனுமாய் உலகத்தாரால் விரும்பப்பெறும் சிறப்பான நெறியின் கண்ணே ஒழுகுவான் கடல்சூழ்ந்த உலகத்தில் எனவும்.

இ∴து, கதிரவனுக்கும் சோழனுக்கும் சிலேடையாக வந்தமையைக் காண்க.

## 2. பிரிமொழிச் சிலேடை

**''தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய**
**எள்ளா வரிமா னிடர்மிகுப்ப – உள்வாழ்தேம்**
**சிந்துந் தகைமைத்தே எங்கோன் திருவுள்ளம்**
**நந்துந் தொழில்புரிந்தார் நாடு''**

**விளக்கம்:**

அழகுகெடாத நிலங்களில் உண்டாகிய பகட்டோ் பெரிய தாமரையைப் பொருத்தவும், இகழப்படாத நெற் சூட்டை உழவா் திரட்டவும், அத்தாமரை பலரின் உண்டாகிய தேன் பொழியும் பெருமையை உடையது எங்கோமானாகிய சோழனுடைய திருவுள்ளம் மகிழும் வகை நடந்தோர் நாடு எனவும்……..அசையாத விடத்தோ் என்னும் மரமுடையதாய்ப் பெரிய மலைமுடிகளைத் தாவும் மான்களை உடையதாய் இகழப்படாத சிங்கப் போத்துகள் துன்ப முறுத்தவும்பட்டு நல்லோர் உள்ளங்களில் வாழும் நாடுகளெல்லாம் அழிவுபடுந் தன்மையை உடையதாம் எம் தலைவனாகிய சோழன் திருவுள்ளம் வேறுபடுந் தொழிலைச் செய்கின்றவா்கள் வாழும் நாடு எனவும்.

இது சோழனுடைய மனங்களிக்குமாறு நடந்தோருடைய நாட்டிற்கும் அவனுடைய மனம் வெறுக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும் சிலேடையாக உரைக்கப்பட்டது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தீவகஅணியின் வகைகளைஎழுதுக. | K2 | CO2 | PO4 |
| 2 | அணிஎன்றால் என்ன? சான்றுதருக. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K4 | CO3 | PO5 |
| 3 | உவமைஅணியைவிளக்குக. | K1 | CO4 | PO1 |
| 4 | உவமஉருபுகள் சிலவற்றை கூறு. | K5 | CO5 | PO2 |
| 5 | வேற்றுமைஅணிகுறித்துஎழுதுக. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | உவமைஅணியின் பகுதிகள் யாவை? அதனைஆராய்க. | K3 | CO4 | PO4 |
| 2 | கல்விபோல் மம்மர் அறுக்கும் மருந்து இதில் பயின்றுவந்துள்ளஅணியினைவிளக்குக. | K4 | CO2 | PO6 |
| 3 | உருவகஅணியின் வகைகளைவிவரித்துஎழுதுக. | K1 | CO1 | PO5 |
| 4 | வேற்றுமைஅணிக்குசான்றுதந்துவிவரி. | K5 | CO5 | PO6 |
| 5 | அணியிலக்கணத்தின் சிறப்பம்சங்களைகட்டுரைக்க. | K6 | CO3 | PO3 |

## அலகு – 5

## 25. விசேட அணி

**“குணந்தொழின் முதலிய குறைபாடு தன்மையின்**

**மேம்பட வொருபொருள் விளம்புதல் விசேடம்''**

**விளக்கம்:**

குணமும் தொழிலும், சாதியும், பொருளும், உறுப்பும் முதலாயின குறைபடுதல் காரணமாக ஒரு பொருட்கு மேம்பாடு தோன்றச் சொல்லுவது விசேடம் என்னும் அணியாகும்.

### 1. குணக்குறை விசேடம்

**''கோட்டந் திருப்புருவம் கொள்ள அவா் செங்கோல்**
**கோட்டம் புரிந்த கொடைச் சென்னி – நாட்டம்**
**சிவந்தன வில்லை திருந்தாா் கலிங்கம்**
**சிவந்தன செந்தீத் தெற''**

**விளக்கம்:**

கொடை பொருந்திய சோழனுடைய அழகிய புருவங்கள் வளைதலைக் கொள்ளவில்லை. அவனுடைய அந்தப் பகைவா்களின் செங்கோல் கெடுதலையடைந்தன. அச் சோழனுடைய கண்கள் சிவக்கவில்லை. பகைவா்களுடைய கலிங்க நாட்டுப் பகுதிகள் சிவந்த தீ எரித்தலாற் சிவப்புற்றன.

சோழன் நன்கு சினம் கொள்ளாததற்கு முன்பே சிவப்புற்றன. அவனுடைய பகைவா்கள் நிலை குலைந்தனா் என்பது கருத்து. புருவங்கள் நெறிப்புற்று வளைதலும், கண்கள் சிவத்தலும் சினத்திற்கு அறிகுறிகளாம். கலிங்க நாடுகள் ஏழுவகைப்படும் ஆதலின் சிவந்தன என்றாா்.

### 2. தொழில்குறை விசேடம்

**''ஏங்கா முகில்பொழியா நாளும் புனல் தேங்கும்**
**பூங்கா விரிநாடன் போா்மதமா – நீங்கா**
**வளைபட்ட தாளணிகண் மாறெதிா்ந்த தெவ்வா்**
**தளைபட்ட தாட்டா மரை''**

**விளக்கம்:**

முழங்குதலைச் செய்து முகில்கள் மழையைப் பெய்யாத நாளிலும் நீா்பெருகிப் பாய்கின்ற அழகிய காவிரி சோ்ந்த நாடனுடைய போரில், மதம் பொருந்திய யானைகளின் தாள்களெல்லாம் கழலாதபடி வளைந்திடப் பெற்ற வீரக கழல்களைப் பூண்டன. இவை இவ்வாறு செய்யவே அன்றே பகையாகிய அரசா்களின் அடிகளாகிய தாமரைகள் எல்லாம் தளையாகிய விலங்கைப் பூண்டன.

## 3. சாதிக்குறை விசேடம்

**“மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுவுண்ட**
**ஆயனார் மாறேற் றமர்புரிந்தார் - தூய**
**பெருந்தருவும் பின்னுங் கொடுத்துடைந்தார் விண்மேற்**
**புரந்தனும் வானோரும் போல்”**

**விளக்கம்:**

ஆன் கூட்டங்கள் மேய, அவற்றைக் காத்து வெண்ணெயைத் தோண்டியெடுத்துண்ட இடையராகிய கண்ணபிரான் பகையாக நின்று எதிர்த்துப் போர் புரிந்தார். அவ்வாறு செய்யவே விண்ணுலகத்திலுள்ள இந்திரனும் தேவர்களும் தூய்மை பொருந்திப் பெருமை பெற்ற பாரிசாதத் தருவையும், தமது முதுகையும் கொடுத்துத் தோல்வியடைந்தார்கள்.

இதில "ஆயனார்" என்று சாதியில் இழிவு கூறி, உயர்ந்த தேவர்களை வெல்லுதலாகிய செயலில் உயர்வு விளங்கக் கூறினமையால் சாதிக் குறை விசேடம் அமைகிறது.

## 4. பொருட் குறை விசேடம்

**“தொல்லை மறைதேர் துணைவன்பால் ஆண்டுவரை**
**எல்லை இருநாழி நெற்கொண்டோர் - மெல்லியலாள்**
**ஓங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டுமால்**
**ஓங்கொலிநீர்க் காஞ்சி யிடை”**

**விளக்கம்:**

ஒலிக்கின்ற ஒலியை உடைய நீர்வளம் பொருந்திய காஞ்சி நகரிடையே, மெல்லிய தன்மையை உடையவளாகிய உமாதேவியானவள் பழமையான மறைகளைத் தேர்ந்த தன் தலைவனிடத்தே ஓராண்டளவும் இருநாழி நெல்லைப் பெற்று அதனாலேயே முப்பத்திரண்டறங்களையும் வளர்த்து, உயர்ந்த உலகத்தில் வாழுகின்ற உயிர்களையெல்லாம் உயவூட்டிப் பாதுகாத்து வருவாளாயினாள்.

இதில் "இருநாழி நெற் கொண்டு" என்று பொருட்குறை காட்டி அதனைக் கொண்டு உயிரனைத்தும் ஊட்டும் எனக் காரியத்தில் உயர்வு தோன்றக் கூறினமையால் பொருட்குறை விசேடம் அமைந்திருத்தல் காண்க.

## 5. உறுப்புக் குறை விசேடம்

**“யானை யிரதம் பரியா ளிவையில்லை**

**தானும் அனங்கன் தனுக்கரும்பு – தேனார்**
**மலரைந்தி னால்வென் றடிப்படுத்தான் மாரன்**
**உலகங்கள் மூன்றும் ஒருங்கு"**

**விளக்கம்:**

மன்மதனுக்கு யானை, தேர், குதிரை, காலாட்கள் ஆகிய நால்வகைப் படைகளும் இல்லை. மேலும் அவன் உடலில்லாதவன். அவனுடைய வில்லோ வலிமையற்ற கரும்பு, அந்த மன்மதன், தேன் பொருந்திய ஐந்து மலர்களினாலேயே மூவுலகங்களையும் ஒருங்கே வென்று தனக்குக் கீழ்ப்படுத்தினான்.

## 26. ஒப்புமைக் கூட்டணி

**"கருதிய குணத்தின் மிகுபொரு ளுடன்வைத்**
**தொருபொரு ளுரைப்ப தொப்புமைக் கூட்டம்"**

**விளக்கம்:**

ஒரு பொருளைச் சொல்லுமிடத்துத் தான் கருதிய குணம் முதலாயினவற்றின் மிகுந்த பொருளைக் கூட வைத்துச் சொல்லுவது ஒப்புமைக் கூட்டம் என்னும் அணியாம்.

அவ்வொப்புமைக் கூட்டமென்னும் அணி ஒன்றனைப் புகழ்தற் கண்ணும், பழித்தற்கண்ணும் தோன்றும்.

### 1. புகழொப்புமைக் கூட்டம்

**"பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்**
**தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும் - நாண்டாங்கு**
**வண்மைசால் சான்றவரும் காஞ்சி வளம்பதியின்**
**உண்மையால் உண்டிங் அலகு"**

**விளக்கம்:**

உமாதேவியின் கொங்கைகள் அணிகலன்களை அணிந்தபடியே அழுந்துதலால் திருமேனி குழைவுற்ற மலையும் (ஏகாம்கரநாதரும்), தூண்டப்படாத தெய்வத் தன்மை பொருந்திய ஒளியுள்ள விளக்கும் பிறர் நாணத்தைக் கொள்ளும் படியான ஈகைக் குணம் மிகுந்த பெரியோர்களும் காஞ்சியென்னும் வளம் பொருந்திய நகரத்திலே இருக்கின்றமையால் இந்நிலவுலகமானது நிலை பெற்றிருக்கின்றது.

இதில் குழை பொருப்பும் தூண்டா விளக்குமாகிய உயர்ந்த பொருள்களோடு பெரியோரைச் சேர்த்து உயர்த்திக் கூறினமையால் புகழாப்புமைக் கூட்டம் அமைந்துள்ளது.

### 2. பழிப்பொப்புமை கூட்டம்

**“கொள்பொருள் வெ..கிக் குடியலைக்கும் வேந்தனும்**
**உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்**
**இவ்விருந் தெல்லை கடப்பாளும் இம்மூவர்**
**வல்லே மழையருக்கும் கோள்”**

**விளக்கம்:**

பொருளைக் கைப்பற்ற விரும்பிக் குடிகளை வருந்துகின்ற அரசனும், உள்ள உண்மையைக் கூறாது வழக்கில் வெல்லும் பொருட்டு மாறுபாடான மொழியைக் கூறும் மனிதரும், ஒருவனுடைய வீட்டில் அவனுக்கு மனைவியாயிருந்து அவனது எல்லை கடந்து நடப்பவளமாகிய இம்மூவர்களும் விரைவாகவே மழையைக் குறையச் செய்யும் கோள்களாவர்.

இதில் மூவரிடத்தும் சேர்க்கப்பட்ட இழித்தன்மைகளால் பழிப் ஓப்புமைக் கூட்டம் அமைதல் காண்க.

## 27. விரோதவணி

**“மாறுபடு சொற்பொருண் மாறுபாட் டியற்கை**
**விளைவுதர உரைப்பது விரோத மாகும்”**

**விளக்கம்:**

மாறுபட்ட சொல்லாலும் பொருளாலும் மாறுபட்டுத் தன்மையின் விளைவு தோன்றக் கூறுவது விரோதம் என்னும் அணியாகும்.

### பொருள் விரோதம்

**“சோலை பயிலுங் குயின்மழலை சோர்ந்தடங்க**
**ஆலு மயிலினங்கள் ஆர்த்தெழுந்த – ஞாலம்**
**குளிர்ந்த முகில் கறுத்த கோபஞ் சிவந்த**
**விளர்ந்த துணைபிரிந்தார் மெய்”**

**விளக்கம்:**

சோலைகளில் தங்கிய குயில்களின் மழலைச் சொற்கள் சோர்வுற்றடங்க, ஆடுகின்ற மயிற் கூட்டங்கள் ஆரவாரித்து எழுந்தன. நிலங்குளிர்ச்சி அடைதற்குக் காரணமான முகில்கள் கறுத்தன. இந்திர கோபப் பூச்சிகள் சிவந்தன. துணைவரைப் பிரிந்தவருடைய உடல்கள் வெளுத்தன.

## சொல் விரோதம்

**"காலையும் மாலையுங் கைகூப்பிக் கால்தொழுதால்**
**மேலை வினையெல்லாங் கீழவாம் - கோலக்**
**கருமான்தோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தாப்**
**பெருமானைச் சிற்றம் பலத்து"**

**விளக்கம்:**

அழகு பொருந்திய கூரிய யானைத் தோலையும் வெண்மையான திருநீற்றையும், சிவந்த திருமேனியையும் பசிய கொன்றை மாலையையுமுடைய சிவபெருமானைத் திருத் தில்லையில் காலையிலும் மாலையிலும் கைகளைக் கூப்பித் திருவடிகளைத் தொழுதால் மிகுதிப்பட்ட ஊழ்வினைகளெல்லாம் குறைந்தழியும்.

## 28. மாறுபடு புகழ் நிலையணி

**"கருதிய பொருள்தொகுத் தாங்கது பழித்தற்கு**
**வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை"**

**விளக்கம்:**

கவி தான் கருதிய பொருளை மறைத்து அதனைப் பழித்தற்கு வேறொன்றனைப் புகழ்வது மாறுபடு புகழ் நிலை என்னும் அணியாம்.

**"இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல**
**தருநிழலும் தண்ணீரும் புல்லும் - ஒருவவர்**
**படைத்தனவும் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேல்**
**துடைத்தனவே யன்றோ துயர்"**

**விளக்கம்:**

இந்தப் புள்ளிமான்கள் பிறரிடம் பின் சென்று இரத்தலை அறியமாட்டா. எவரிடத்தும் தம் குறைகளைச் சொல்லிப் பின் செல்ல மாட்டா. ஒருவர் ஈட்டியனவாகிய நல்ல மரத்தின் நிழலையும்,

குளிர்ந்த நீரையும் புல்லையுங் கொள்ளா. அவற்றைத் தாமே பெறும் ஆதலின் இவை இந்த நிலத்தின் மேல் துன்பத்தை ஒழித்தன வன்றோ?

இது செல்வர்களை அடைந்து இரந்து அவர் பின் சென்று குறைவுற்று வருந்தும் ஓர் இரவலனை இழித்துக் கூறியதாக அமைந்தது. இதில் மானைப் புகழ்தலால் இரவலனது இழிவு தோன்றி மாறுபடு புகழ்நிலை அமைந்துள்ளது.

## 29. புகழாப் புகழ்ச்சியணி

**"பழிப்பது போலும் பான்மையின் மேன்மை**
**புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி"**

**விளக்கம்:**

பழித்தலைப்போல ஒன்றுக்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப் புகழ்ச்சி என்னும் அணியாம்.

**"நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோர்**
**அனைவரையும் புல்லினாள் அன்றே – மனுநூல்**
**புணர்ந்த நெறியொழுகம் பூழியநீ இந்நாள்**
**மணந்த தடமலர்மேனி மாது"**

**விளக்கம்:**

மனுதரும நூலிற் பொருந்திய நன்னெறிப்படி நடக்கின்ற சோழனே! நீ இந்நாளில் உரிமையாகச் சேர்ந்தவனாகிய பெரிய தாமரை மலரில் தங்கும் திருமகள் எண்ணுதற்கும் அரிய பலவகைச் சீர்த்தியை உடையவராகிய உன் குலத்துப் பழமையானவர்களெல்லோரையும் உரிமையாகக் கொண்டு கூடின வளன்றோ?

இதில் உன்னால் உரிமையோடு சேரப்பட்டவள் பலருக்கும் உரிமையானவள் என்று பழித்தாற் போலக் கூறிய தன்மையினால் நீ வழி முறையாக உனக்குரிய இராச்சிய லட்சுமியைச் சேர்ந்தனை என்று புகழ்ச்சி தோன்றுதல் மூலம் புகழாப் புகழ்ச்சியணி அமைதல் காண்க.

## 30. நிதரிசனவணி

**"ஒருவகை நிகழ்வதற் கொத்தபயன் பிறிதிற்குப்**
**புகழ்மை தீமை என்றிவை புலப்பட**
**நிகழ்வ தாயின் நிதரிசனம் அதுவே"**

**விளக்கம்:**

ஒருவகையான் நிகழ்வதொன்றற்குப் பொருந்தியதாகிய ஒரு பயனை வேறொன்றற்கு நன்மை புலப்படவோ அன்றித் தீமை புலப்படவோ செய்வதெனச் சொல்வது நிதரிசனம் என்னும் அணியாம்.

### 1. புகழ்மை நிதரிசனம்.

**"பிறர்செல்வங் கண்டால் பெரியோர் மகிழ்வும்**
**சிறியோர் பொறாத திறமும் - அறிவுற்இச்**
**செங்கமல மெய்ம்மலர்ந்த தேங்குமுத மெய்யயர்ந்த**
**பொங்கொளியோன் வீறெய்தும் போது"**

**விளக்கம்:**

பிறருடைய செல்வத்தைக் கண்டால் பெரியோன் மகிழ்ச்சி அடைவதையும் சிறியோர் பொறாமை அடைவதையும் அறிவுறுத்தி மிகுந்த ஒளியை உடையவனாகிய கதிரவன் தோன்றி, ஒளி மிகுங் காலத்தில் செந்தாமரை மலர்கள் உடல் நெகிழ்ந்து மலர்ந்தன. தேன் பொருந்திய அல்லி மலர்கள் உடல் வாழக் குவிந்தன.

இது நற்பொருள் காட்சி.

### 2. தீமை நிதரிசனம்

**"பெரியோர் உழையும் பிழைசிறிதுண் டாயின்**
**இருநிலத்துள் யாரு மறிதல் - தெரிவிக்கும்.**
**தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்**
**வாக்கு மதிமேன் மறு"**

**விளக்கம்:**

கடல் சூழ்ந்த உலகிலே, யாவருக்கும் இனிய அமுதினைத் தருகின்ற மதியின்மேலும் மறுக் காணப்படும். இவ்வாறு பெரியோரிடமும் சிறு பிழை உண்டானால் அதை உலகத்தார் எல்லோரும் அறிந்து பழிப்பர்.

இது தீப்பொருட்காட்சி.

## 31. புணர்நிலையணி

**“வினைபண் பெனவிவை இருபொருட் பொன்றே**
**புணர மொழிவது புணர்நிலை யாகும்”**

**விளக்கம்:**

வினையாலும் பண்பாலும் இரண்டு பொருளுக்கொன்றே பொருந்தச் சொல்வது புணர்நிலை என்னும் அணியாம்.

### 1. வினைப்புணர் நிலை

**“வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து**
**நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த – ஆண்டகையோர்**
**மேவல் விரும்பும் பெருநகையால் மெல்லாவி**
**காவல் புரிந்திருந்தோர் கண்”**

**விளக்கம்:**

தானவேண்டிய உருவத்தைக் கொண்டு கறுத்த நிறத்தை உடையதாய் விண்ணிலே பரந்து பெரிதாகவுள்ள மழைமுகிலுடனே நீர் பொழியா நின்றன. பிறர் விரும்புந் தன்மையுடையதாகிய உருவத்தை உடையதாய் அழகு செய்யுமாறு எழுதப்பட்டமையோடு கூடியதாய் நீண்டிருக்கின்ற கண்கள்.

ஆண்மைத் தன்மை மிக்க தலைவரைச் சேர்தலை விரும்பியிருக்கின்ற காதலாலே தம்முடைய மெல்லிய உயிர் போகாதபடி காக்குந் தொழிலை மேற்கொண்டிருக்கின்ற மடவாருடைய கண்ணெனக் கூட்டுக.

### 2. பண்புப் புணர்நிலை

**“பூங்காவில் புள்ளொடுங்கும் புன்மாலைப் போழ்துடனே**
**நீங்காத வெம்மையவாய் நீண்டவனவால் - தாங்காதல்**
**வைக்குந் துணைவர் வருமவதி பார்த்தாவி**
**உய்க்குந் தமியார் உயிர்”**

**விளக்கம்:**

காதலிக்கப்பட்ட கணவர் வருங்காலத்தைப் பார்த்திருந்த மடவாருடைய உயிரானது பூம்மொழிற் கண்ணே பறவைகளெல்லாம் ஒடுங்கிய மாலைப் பொழுதுடனே, நீங்காத துன்பஞ் செய்து தானும் போகாமல் நின்றது.

## 32. பரிவருத்தனையணி

**"பொருள்பரி மாறுதல் பரிவருந் தனையே"**

பொருள்களை ஒன்றற்கு ஒன்று தந்து ஒன்று கொண்டனவாகச் சொல்வது பரிவருத்தனை என்னும்
அணியாம்.

**"காமனை வென்றோன் சடைமதியுங் கங்கையும்**
**தாம நிழலொன்று தாங்கொடுத்து – நாமப்**
**பருவா ளரவின் பணமணிகள் தோறும்**
**உருஆயிரம் பெற் றுள"**

**விளக்கம்:**

காமனை வென்ற முக்கட் கடவுளுடைய சடை மீது உண்டாகிய திங்களும், கங்கையும் வருத்தஞ் செய்யும் தன்மை உடையதாய், பெரிதாகிய ஒளியினை உடையதாய் அங்கேயிருந்த பாம்பின் படங்களில் உண்டாகிய மணிகள் தோறும் தத்தம் உருவத்தைக் கொடுத்து ஆயிரம் ஆயிரம் உருவத்தைப் பெற்றன.

## 33. வாழ்த்தணி

**"இன்னார்க் கின்ன தியைக வென்றுதாம்**
**முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப"**

இன்ன தன்மையை உடையார்க்கு இன்னது நிகழ்கவென்று புலவர்கள், தாம் கருதியதனைக் கூறுவது வாழ்த்து என்னும் அணியாம் என்று கூறுவர்.

**"மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி**
**ஆவாழி வாழி அருமறையோர் - காவிரிநாட்**
**டண்ணல் அனபாயன் வாழி அவன்குடைக்கீழ்**
**மண்ணுலகில் வாழி மழை"**

**விளக்கம்:**

அழியாத தமிழானது தோற்றுவித்த பழமையான நூல்களை உணர்ந்த அகத்திய முனிவர் வாழ்க! பசுங்களெல்லாம் வாழ்க! அரிய மறைகளைக் கற்றுணர்ந்த மறையவர்கள் வாழ்க! காவிரியாறு பாய்கின்ற சோழநாட்டுக்குத் தலைவனாகிய அனபாயன் என்னும் சோழன் வாழ்க! அவனுடைய அரசாட்சிக்கு உட்பட்ட உலகத்தில் மழை வாழ்க!

## 34. சங்கீரணவணி

**''மொழியப் பட்ட அணிபல தம்முள்**
**தழுவ உரைப்பது சங்கீ ரணமே''**

மேற்கூறப்பட்ட அணிகள் பலவும் தம்முட் பொருந்த உரைப்பது சங்கீரணம் என்னும் அணியாம்.

**''தண்டுறைநீர் நின்ற தவத்தால் அளிமருவு**
**புண்டரிக நின்வதனம் போன்றதால் - உண்டோ**
**பயின்றா ருளம்பருகும் பான்மொழியாய் பார்மேல்**
**முயன்றால் முடியாப் பொருள்''**

**விளக்கம்:**

குளிர்ந்த துறைநீரிலே தவம் புரிந்த படியால் வண்டால் மருவப்பட்ட தாமரை நின் முக மண்டலத்தை ஒப்பப் பெறுதலால், அணைந்தார் உள்ளத்தைப் பற்றும் பால் போன்ற மொழியினை உடையாய்! உலகத்தில் முயற்சியினால் முடியாத பொருள் யாதுமில்லை.

இதில் பல அணிகள் கலந்து வந்துள்ளன. இதனைத் தமிழ்நூலார் "கலவையணி" என்பர்.

| | |
|---|---|
| தண்டுறைநீர் நின்றதவம் | - **தற்குறிப்பேற்ற அணி** |
| தவத்தால் | - **காரகவேதுவணி** |
| அளிமருவு | - **சிலேடையணி** |
| புண்டரிகம் நின்வதனம் போலும் | - **உவமையணி** |
| "உண்டோ முயன்றால் முடியாப் பொருள்" | - **வேற்றுப்பொருள் வைப்பணி** |
| "உளம் பருகும் பான் மொழியாய்" | - **சுவையணி** |

## 35. பாவிக அணி

**''பாவிக மென்பது காப்பியப் பண்பே''**

**விளக்கம்:**

பாவிகமென்று சொல்லப்படுவது பொருட்டொடர் நிலைச் செய்யுளிடத்தே புலவர்களாற் செய்யப்பெறும் ஒரு செயல்.

அது தொடர்நிலைச் செய்யுள் முழுதும் நோக்கிக் கொள்ளப்படுமேயல்லது. துனித்து ஒரு பாட்டால் நோக்கிக் கொள்ளப் புலப்படாதது.

**"பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப**
**பொறையிற் சிறந்த கவசமில்லை**
**வாய்மையிற் கடியதோர் வாளியில்லை"**

என்பதைப் போல் வருவது.

**"பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப"**

என்பதற்குப் பொருள், பிறர் மனைவியை விரும்புவோர் சுற்றத் தொடுங் கெடுவர் என்பதாம். இது இராமாயணத்தால் உணரப்படும். "பொறையிற் சிறந்த கவசமில்லை" என்பது, பொறுமையைப் பார்க்கிலும் சிறந்த பாதுகாப்பில்லை என்பதாம். இது பாரதத்தால் உணரப்பெறும்.

"வாய்மையிற் கடியதோர் வாளியில்லை" என்பதற்குப் பொருள், உண்மையைப் பார்க்கிலும் துன்பத்தைக் கொடுக்கக் கூடியதோர் அம்பில்லை என்பதாம். இ∴து அரிச்சந்திரன் வரலாற்றை அறியப்படும்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தன்மையணிகுறித்துஎழுதுக. | K4 | CO1 | PO4 |
| 2 | மொழிமாற்றுநிரல்நிறைஅணியின் இலக்கணம் தருக. | K5 | CO2 | PO5 |
| 3 | இலேசஅணிஎன்றால் என்ன? விளக்குக. | K3 | CO4 | PO1 |
| 4 | காரக ஏதுவின் வகைகள் யாவை? | K5 | CO2 | PO2 |
| 5 | பெயர் பொருள் தற்குறிப்பேற்றத்தினைவிளக்குக. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தற்குறிப்பேற்றஅணியின் வகைகளைஎடுத்துக்காட்டுடன் விவரிக்க. | K2 | CO5 | PO4 |
| 2 | சிலேடைஅணியைஎடுத்துக்காட்டுடன் விளக்குக. | K3 | CO3 | PO6 |
| 3 | ஏது அணிகுறித்துகட்டுரைவரைக. | K2 | CO5 | PO5 |
| 4 | சிலேடையின் விரிகுறித்துஎடுத்துரைக்க. | K5 | CO3 | PO6 |
| 5 | நிரல்நிறுத்து இயற்றுதல் நிரல்நிறைஅணியே- கட்டுரைக்க. | K3 | CO3 | PO3 |

## Text Books

- அமிர்த சாகரர் இயற்றிய யாப்பருங்கலக் காரிகை, வேங்கடசாமி நாட்டார், கழகப் பதிப்பு, சென்னை, 1997
- யாப்பருங்கலம், அமிர்த சாகரர், சரசுவதி மஹால் நூல் நிலையம், தஞ்சை
- யாப்பருங்கலம், பதிப்பாசிரியர் மே வீ. வேணுகோபாலப்பிள்ளை
- யாப்பருங்கலம், உரை குணசேகரன்
- தண்டியலங்காரம், கொ. இராமலிங்கத் தம்பிரான், கழக வெளியீடு, சென்னை

## Reference Books


நன்னூல் எழுத்ததிகாரம், சோம. இளவரசு மணிவாசகர் பதிப்பகம், சென்னை

தமிழ் மொழி இலக்கண இயல்புகள், கலாநிதி அ சண்முகதாஸ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்., சென்னை, 2008

தமிழ் யாப்பிலக்கணத்தின் தோற்றமும் வளர்ச்சியும், முனைவர் சோ.நா.கந்தசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2004

மாறனலங்காரம், இரா கண்ணன், அப்பர் பதிப்பகம், சென்னை

அணி இலக்கண வரலாறு, இரா கண்ணன், அப்பர் பதிப்பகம். சென்னை

| | |
|---|---|
| | மாறனலங்காரம், ஆண்டவன் சாமிகள் |

| Related Online Contents [MOOC, SWAYAM, NPTEL, Websites etc.] |
|---|
| **Web Sources** |

- Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>
- Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library
- Project Madurai - www.projectmadurai.org.
- Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.
- Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.
- Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com
- Tamil Books on line- books.tamil cube.com
- Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org
- Tamil novels on line - books.tamilcube.com

| Expected Course Outcomes | | |
|---|---|---|
| **இப்பாடத்தைக் கற்பதால் பின்வரும் பயன்களை மாணவர்அடைவர்.** | | |
| **On the Successful completion of the Course,Students will be able to** | | |
| CO 1 | **யாப்பிலக்கணத்தின் உறுப்புகளைப் பற்றிய வரையறைகள், வகைகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளல்** | K2 |
| CO 2 | **வெண்பா,, ஆசிரியம், கலி, வஞ்சி, மருட்பா உள்ளிட்ட பாக்கள் அதன் பால் இனங்களை கற்றுக்கொண்டு படைப்புகளை மேற்கொள்ள முயலுதல்** | K3 |

| | | |
|---|---|---|
| CO 3 | இலக்கியங்களை உருவாக்கும் போதும் சுவைக்கும் போதும் யாப்பிலக்கண அறிவு அவசியமானது என்பதை அறிந்து பயன்படுத்துதல் | K4 |
| CO 4 | அணி இலக்கணம் மரபாக வளர்ச்சி பெற்ற நிலைகள் குறித்து அறிந்து கொள்ளுதல். பழந்தமிழ் நூல்களில் புதைந்துள்ள அணிகளைச் சுவைப்பதற்கும் ஆராய்வதற்கும் பயிற்சி அளித்தல் | K3 |
| CO 5 | பழந்தமிழரின் அழகியல் உணர்வுகளைத் தண்டி அலங்காரம் வழிப் புரிந்து கொள்ளுதல்.கற்றுக்கொண்ட அணிகளை மரபுக் கவிதை புதுக்கவிதை உரைநடை ஆகியவற்றில் பயன்படுத்தும் மொழி ஆற்றலைப் பெறச் பெறுதல் | K5 |
| Remember; K2 - Undestand; K3 - Apply; K4 - Analyze; K5 - Evaluate; K6 - Create | | |

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PSO 1 | PSO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CLO1 | 3 | 2 | 3 | 3 | 3 | 2 | 1 | 3 | 2 | 3 | 2 | 3 |
| CLO2 | 3 | 3 | 2 | 3 | 3 | 3 | 2 | 3 | 3 | 3 | 2 | 2 |
| CLO3 | 3 | 2 | 3 | 3 | 1 | 2 | 2 | 2 | 3 | 2 | 3 | 3 |
| CLO4 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 3 | 2 | 1 | 3 | 2 |
| CLO5 | 3 | 3 | 1 | 2 | 2 | 2 | 3 | 2 | 3 | 3 | 3 | 3 |